Registered as a NewsPaper

26 OCT 2004

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-14 | 30-10-2004 | சனிக்கிழமை | ஓசை -255



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்


R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-10476) விநாயகர் வீதி, மயிலிட்டி.

- குறுக்கு வழியில் அரசியலமைப்பை மாற்ற -

# அரசாங்கம் முயற்சிக்குமேயானால் புலிகளும் அதேவழியில் புதிய அரசை உருவாக்க முடியும்!

## - எதிர்க்கட்சித் தலைவர் ரணில் எச்சரிக்கை



(கொழும்பு)

**அரசாங்கம் குறுக்கு வழியில் அரசியலமைப்பைத் திருத்தம் செய்ய முயற்சிக்குமானால் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு அரசியலமைப்பு நிர்ணய சபையை அமைப்பததைத் தவிர்க்க முடியாது போய்விடுமென எச்சரித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க இதனை எவராலும் தடுத்து விட முடியாது போய்விடும் எனவும் தெரிவித்துள்ளார்.**

இந்து சமுத்திர ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளின் சனநாயகத்திற்கான ஒத்துழைப்பு மாநாடு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரை யாற்றிய போதே இவ்வாறு அவர் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; தமது கட்சியின் ஆட்சிக் காலத்தில் போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. 56 நாடுகள் கலந்துகொண்ட டோக்கியோ மாநாட்டில் சமாதானத்தை ஊக்குவிக்கும் வகையில் நிதி உதவி வழங்க சர்வதேச சமூகம் இணக்கம் தெரிவித்தது. சமாதானப்பேச்சு (12ஆம் பக்கம் பார்க்க)

# உந்துருளி விபத்தில் சிக்கியது பல்கலை மாணவன் ஒருவர் பலி

## - மேலும் இரு மாணவர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் மூவர் பயணித்துக் கொண்டிருந்த உந்துருளி ஒன்று வீதியைவிட்டு விலகி பள்ளத்துள் வீழ்ந்தது அதில் பயணித்த ஒருவர் பலியானதுடன் மற்றைய இருவரும் காயமடைந்துள்ளனர். நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட வளாகத்திற்கு முன்பாக உள்ள வீதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்தவரும் யாழ். பல்கலைக் கழக கலைப்பீடத்தின் இரண்டாம் வருட மாணவனுமான சீவரத்தினம் விவேக மூர்த்தி (வயது 23)என்பவர் பலியாகியுள்ளதுடன் இம்மாணவனின் நண்பர்களான மற்றைய இருவரும் காயமடைந்தனர். யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட வளா(12ஆம் பக்கம் பார்க்க)

# சனாதிபதிக்கு சேறுபூசும் வகையில் வீரவன்ச ஆற்றிய உரை கவலைக்குரியது

## – பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு

பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச அண்மையில் சனாதிபதி தொடர்பாக கூறிய கூற்றுத் தொடர்பாக பிரதியமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு தமது கவலையை வெளியிட்டுள்ளது.

இந்தக் கூற்றை பாராளுமன்ற உறுப்பினர் திருத்திக்கொள்ளாத தன் காரணமாக இது தொடர்பாக வெளிவந்த அறிக்கைகள் உண்மையென ஏற்றுக்கொள்ள வேண்டி ஏற்படுமென இக்கூட்டமைப்பில் ஒருங்கிணைப்பாளரும் தலைவருமாகிய பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்க காலத்தில் சனாதிபதி தனிப்பட்ட முறையிலும், அரச மட்டத்திலும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டதாக அக்கூட்டமைப்புச் சுட்டிக்காட்டுகின்றது.

அவ்வாறான நிலைமையின் கீழ் மானசீக மற்றும் உடல்ரீதியாக அவர் எதிர்நோக்கிய நெருக்கடித் தன்மைகள் முகத்தினூடாக வெளிப்படுமாயின் அது இயற்கையானதென அக்கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளாது சனாதிபதிக்கு சேறுபூசும் வகையில் ஆற்றிய (12ஆம் பக்கம் பார்க்க)

# போராளி ஜூட் கொலை குறித்த அடையாள அணிவகுப்பு பிற்போடல்

விடுதலைப் புலிகள் போராளி ஜூட் கொலை தொடர்பாக நேற்று அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் நடைபெறவிருந்த அடையாள அணிவகுப்பு பாதுகாப்புக் காரணங்களுக்காக காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி அக்கரைப்பற்று பேருந்து நிலையத்தில் இப்போராளி கருணா குழு வைச் சேர்ந்த இருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டார். கொலையாளிகளில் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் துரத்திச் சென்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ள போதிலும் மற்றுமொருவர் தப்பியோடிவிட்டார். கடந்த 23ஆம் திகதி இரவு மட்டக்களப்பு ஆரையம்பதியில் விசேட அதிரடிப்படையினரால் இரவு தொலைநோக்கிக் கருவியுடன் கைது செய்யப்பட்ட சூட்டி எனப்படும் கண்ணப்பன் கணேசன் என்பவரே இந்த தப்பியோடிய நபர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. எதிர்வரும் 5ஆம் திகதி வரை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்நபரை நேற்று அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் (12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள்-படைத்தரப்பினர் யாழ். இல் சந்தித்துப்பேச்சு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினருக்கும் யாழ். மாவட்ட படைத்தரப்பினர்க்குமிடையேயான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று முற்பகல் 10 மணியளவில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது.

கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட தலைவர் கிறிஸ்ரினா தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் சதாஸ், யாழ் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் ஆகியோர் விடுதலைப்புலிகள் தரப்பிலும் யாழ். மாவட்ட இராணுவ துணைக்கட்டளைத் (12ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளையும் வெளிநாட்டு உதவிகளையும் இணைத்துப் பார்க்கக் கூடாது என்கிறது ஜே.வி.பி

## அகாசியிடம் ஜே.வி.பி தலைவர் வலியுறுத்து



சமாதான முயற்சிகளையும் வெளிநாட்டு உதவிகளையும் இணைத்துப் பார்ப்பதன மூலம் இலங்கையின் அபிவிருத்திக்கு கிடைக்கும் நிதியுதவியை நிறுத்த வேண்டாம் என ஜே.வி.பி வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று ஜே.வி.பி இலங்கைக்கு வந்துள்ள ஜப்பானிய சமாதான தூதுவர் யசூசி அகாசியை சந்தித்த போதே இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டது. ஜே.வி.பி அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது. ஏற்கனவே இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்காக தமிழீழ விடுதலைப்புலிகள் முன் வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை திட்டமானது நாட்டு பிரிவினையை வலியுறுத்தி



நிற்பதால் அதனை தாம் எதிர்ப்பதாகவும் ஜே.வி.பி யின் தலைவா சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார். இந்த சந்திப்பு ஜே.வி.பி.யின் (12ஆம் பக்கம் பார்க்க)

# ஜேர்மன் அரசியல் நிபுணர் யாழ். குடாநாட்டுக்கு வருகை

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சிக் காலத்தில் யாழ். குடாநாட்டு வாழ். தமிழ் மக்களின் வாழ்வியல் மற்றும் அபிவிருத்திகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக ஜேர்மன் நாட்டின் சமஷ்டி அரசியல் குறித்த நிபுணரும் சிறுபான்மை இன அபிவிருத்திக்கான கூட்டு முன்னணியின் தலை வருமான போல் காட்டர்ஸ் நேற்று யாழ். குடா நாட்டிற்கு விஜயம் செய்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் யாழ். குடாநாட்டு அரசியல் நிலைமை குறித்து ஆராய்வதற்காக யாழ். வந்த இவர் யாழ்ப்பாணம் (12ஆம் பக்கம் பார்க்க)

# ஆளுநரின் யாழ்-விஜயத்திற்கு யாழ்-பொது அமைப்புக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாண நிலைமைகளை பார்வையிட எதிர்வரும் மூன்றாம் திகதி வடக்கு கிழக்கு ஆளுநர் அசோகா ஜெயவர்த்தனா வருகை தரவிருக்கிறார். இவரது யாழ்ப்பாண விஜயத்திற்கு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது. எதிர்ப்பை மீறி யாழ்குடா வந்தால் போராட்டம் நடாத்தப்படும் என ஒன்றியம் அறிவித்துள்ளது. இது குறித்து நேற்று மாலை ஆளுநருக்குக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அக்கடிதம் வருமாறு

தாங்கள் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. வாழ்வா? சாவா? என தமிழ் மக்கள் தத்தளித்துக் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

25.10.2004இல் பருத்தித் துறையிலிருந்து புதுக்குடியிருப்பு வந்த ஜி.பி.8385 இலக்க பேருந் தில் வேலுப்பிள்ளை-இராச குலசிங்கம் என்பவரது 823584954v அடையாள அட்டை இரண்டு வங்கிப்புத்தகம், உடுப்பு, ஆகிய வற்றுடனான கைப்பை யொன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் புதுக்குடியிருப்பில் ஒப்படைக குமாறு பணிவோடு வேண்டு கிறோம். (5054)


## பாராட்டும் கௌரவிப்பும்

ஸ்கந்தபுரம் பிரதேசத்திலிருந்து முதன் முதலாக பிரதேச செயலராக தெரிவு செய்யப்பட்ட நா.நந்தகுமார் அவர்களினை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு ஆற்றல் கலை சமூக செயன் முனைப்புக் குழு ஏற்பாட்டில் முன்னாள்தலைவர் க.பரமேஸ்வரன தலைமையில் இடம்பெற்றது.

இதில் நா.நந்தகுார் அவர்கள் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் பொது நிறுவன பிரமுகர்கள், கிராம சேவையாளர்கள், பொது மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

# வல்வெட்டித்துறை கரையோரங்களில் கடற்படை முட்கம்பி வேலி அமைப்பு

வடமராட்சி வல்வெட்டித்துறை கடற்கரையோரங்களில் மின் விளக்குகளைப் பொருத்துதல் மற்றும முட்கம்பி வேலிகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளில் சிறி லங்கா கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை பிரதேச கடற்றொழிலாளர்கள் தமது கடற்றொழில் படகுகளைகரை ஒதுக்கு வதற்காக வேண்டி "வான்" தோண்டும் பணியில் இடுபட்ட போது அதனை கடற்படையினர் தடுத்தும் கூட படையினரின் தடையை மீறி அப்பகுதி கடற்றொழி லாளர்கள் கடற்கரையை ஆழ மாக்கி வான் தோண்டும் பணியில் ஈடுபட்டு வெற்றிகரமாக தமது பணியையும் நிறைவு செய்தனர்.

இதனால் கடற்படையினருக் கும் கடற்றொழிலாளர்களுக்குமிடையே உருவான முரண்பாடுகளைத் தொடர்ந்து கடற்படையினர் கடற்கரையில் முட்கம்பி வேலி களை அமைத்து மின் விளக்குகளைப் பொருத்தி வருவது தமக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக வடமராட்சி கடற்றொழிலாளர் சம்மேளம் தெரிவித்துள்ளது.


தகவல் தொழிநுட்ப கற்கைநெறிகள்




இப்பாட நெறிக்கான காலம் 4 மாதங்கள்

ஆரம்பிக்கப்படவுள்ளது.

பதிவுகள் 30/11/04 முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.
பா நெறிகள் யாவும் மூன்றாம் நிலை தொழில் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றவை.

கணினியியல் கல்லூரி
The Computer Collage
யாழ்சாலை, கிளிநொச்சி.
(Affiliated to Asian Computers) (சி-10583)


# பெரிய மாவடி சனசமூக நிலையத்தை மீண்டும் இயக்க நடவடிக்கை

சாவகச்சேரி பெரியமாவடி சனசமூக நிலையத்தில் கடந்த 8 வருடங்களாக நிலை கொண்டிருந்த சிறிலங்கா படையினர் அங்கிருந்து அகன்று சென்றுள்ளனர்.

மேற்படி சனசமூக நிலையத்தில் படையினர் நிலை கொண்டிருப் பது அப்பகுதி மக்களது இயல்பு வாழ்விற்கு அச்சுறுத்தலாக அமைவ துடன், அச்சனசமூக நிலையத்தை மையமாகக் கொண்ட இப்பிரதேச மக்களது அபிவிருத்திகளும் பாதிப்படைவதாக சுட்டிக்காட்டி விடுக்கப்பட்ட கோரிக்கைகளைத் தொடர்ந்தே படையினர் அங்கிருந்து அகன்று சென்றுள்ளனர்.இதனையடுத்து இச்சனசமூக நிலையத்தை புனரமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (33)



உழவு இயந்திரம் ஒன்று பெட்டியின் ஒரு சக்கரம் அகற்றப்பட்ட நிலையில் அதற்குப் பதிலாக இரு மரக்கட்டைகளைப் பொருத்தியவாறு வீதியால் செலுத்திச் செல்லப்படுவதைப் படத்தில் காண்கிறீர்கள். நேற்று கிளிநொச்சி டிப்போ வீதியால் சேவியர் கடைச் சந்திப் பகுதியில் இவ்வாறு உழவு இயந்திரம் செலுத்தப்பட்டது. இதனால் அண்மையில் கிரவல் இட்டு தார் ஊற்றப்பட்டு செப்பஞ் செய்யப்பட்ட வீதியில் சிறிய சிறிய கிடங்குகளுடன் சேதமும் ஏற்பட்டுள்ளது. மழைக்காலமாகையினால் இதன் மூலம் வீதி விரைவில் பழுதடையக் கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது. (சோ)

## கால் நடைகளை கட்டுப்படுத்தக் கோரல்

(கண்டாவளை)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் 2004-2005 பெரும் போக நெற்செய்கை மேற்கொள் ளப்பட்டுள்ளதால் இப் பிரதேசத் தில் 27 ஆம் திகதி தொடக்கம் கால் நடை உரிமையாளர்கள் தமது கால்நடைகளை பகலில் மேய்த் தும் இரவில் பட்டிகளில் அடைத் தும் பராமரிக்குமாறு பிரதேச த.பொ.மே.நிறுவன இணைப்பாளர் ச.லொயிற் அறி வித்துள்ளார். எனவே கால்நடை களை கட்டுப்படுத்த ஒத்துழைக் காத கால்நடை உரிமையாளர்கள் மீது கால்நடை கட்டுப்பாட்டின் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச இணைப்பாளர் மேலும் தெரிவித் துள்ளார். (14)


## கண்ணீர் அஞ்சலி



வாணி ரெக்ஸ் உரிமையாளரும், எமது நண்பன் மணிவர்ணனின் பாசமிகு தந்தையும், சாவகச்சேரி-டச்சுவீதியைச் சேர்ந்தவருமான

அமரர் சுப்பிரமணியம் செல்வராசா (செல்வம்)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கை யாக்குகின்றோம்.

சாரங்கன் நகைமாடம், அன்செனர்ர்,
இல:45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10702)


# முள்ளியவளை கோட்ட தே.எ.பேரவை ஊரகக்கிளை உறுப்பினர் சங்கமம்

முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊரகக் கிளை உறுப்பினர்களுக்கான சங்கம நிகழ்வு முள்ளியவளை மாவீரர் மண்டபத்தில் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு அப்பகுதிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் தியாகராசா தலைமையில் இடம் பெற்றது. மேற்படி நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடரை முள்ளியவளைப் பிரதேச காவல் பணிமனைப் பொறுப்பாளர் கை.கணேசமூர்த்தி ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை முள்ளியவளை புதுக்குடியிருப்பு கோட்ட அரசியல்த் துறைப் பொறுப்பாளர் பிறையாளன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொறுப் பாளர் இலக்கியன் ஏற்றி வைக்க மலர் மாலையினை முள்ளிய வளை. கிழக்கு ஊரக தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் செ.மஞ்சுளா அணிவித்து வைத்தார் வரவேற்புரையினை முள்ளிய வளை வடக்கு மாதர் சங்கத் தலைவி த.பராசக்தி நிகழ்த்தினார். தலைமையுரையைத் தொடர்ந்து ஊரகத் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர்களினால் செயற்பாட்டு அறிக்கை வாசிக்கப்பட்டு கருத் துறைகளும் இடம் பெற்றதைத் தொடர்ந்து, இனி வரும் வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும், மாவீரர் நாள் நிகழ்வு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு தீர்மா னங்கள் எடுக்கப்பட்டதை அடுத்து மாவீரர் நாள் நிகழ்வு தொடர் பாகவும் சமகால அரசியல் நிலை தொடர்பாகவும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கருத்துரைகளை முல்லை மாவட்ட மகளிர் அரசி யல் துறைப் பொறுப்பாளர் செல்வி.செ.வேளினி முள்ளியவளை காவல் பணிமனைப் பொறுப் பாளர் அவர்களும், முல்லை பொருளா தர அபிவிருத்தி நிறுவகப் பொறுப்பாளர் இணைப்பாளர் சுரேஸ், தமிழீழ திரைப்பட உரு வாக்கப் பிரிவுப் பொறுப்பாளர் க. சங்கர் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல அபிவிருத்திக் குழுத் தலைவர் ஜெகதீஸ்வரன், ஆகியோர் நிகழ்வுக்கான சிறப்பு கருத்துரையினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகழ்த்தினார்.


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின்மடியில் 1983 10 13



2004 09 16

கப்படன் இளங்கோவன்
(சுப்பையா குகநாதன்)
கேணல் கிட்டு பீரங்கிப் படையணி

எத்தனை நாட்களாய் நீ
எம்மோடிருந்து - பலரும்
போற்றுதற்குரியதாய்
நேர்த்தியாய் பணிகள் செய்தாய்
என்றும் போற்றுதற்குரியதாய்
மண்ணில்
புகழுடன் வாழ்வாய்.

என்றும் பற்றுடன்
கேணல் கிட்டு பீரங்கிப்படையணி-போராளிகள்.
(5281)



## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1978 11 17



மண்ணுக்காக 1998 10 30

கடற்புலி கப்டன் இளங்கதிர்

போர் என்னும் பூகம்பம் எதிரியால் தாயக பூமியைத்
-தாக்கிட
புயலென பாய்ந்து புலி அணியினில் இணைந்தாய்
தாயகம் ஒன்றே தாரக மந்திரமாய் தலைவன்
பணியினை புரிந்தாய்
விடிவான பொழுதினில் இளங்கதிரெனத் தெரிந்தாய்
அடிவான இருள் நீங்க ஆணவத்திற்கெதிர்
அகராதியானாய்
தரைச்சமராடி நீ வீரமதை இத்தரணிக்கே காட்டி நின்றாய்
கடற்கலமேறி நீ கடற்புலியாகினாய் பாய்மரம் ஓட்டிய
எம்
பாட்டனின் கடலிலே பேய்கள் ஓட்டும் பீரங்கி படகா!
கடற்சமராடி எதிரிகலங்கள் கரை சேர்த்தாய்
அலை கடலேறி எதிரி தலை கொய்து கடல் மீட்டாய்
தியாகத்தீயினில் நின்று நீ சாதனை பல செய்து
சரித்திரமாகியதால் போர்க்கவி ஈழ இசை கீதமதில்
உன்வீர இராகமதைக் கேட்கின்றோம்
போகின்ற பார்க்கின்ற இடமெல்லாம் உன் - வீர
ஒளிப்பட பூமுகம் பார்க்கின்றோம்-அந்த பூரிப்பில்
உன் கல்லறையில் பூத்தூவி அர்ச்சித்து இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

இவருடன் வீரச்சாவடைந்த கடற்புலி கப்டன் மேனனையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தற்போதைய முகவரி:
1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

நிரந்தர முகவரி:
வேம்படி,
வடமராட்சி,கிழக்கு.

(சி-10508)



மேற்குக் கரைநகரான ரமலாவில் இருந்து பலஸ்தீனியத் தலைவர் யசீர் அரபாத்தை ஜோர்தானிய உலங்கு வானூர்தி மூலம் மருத்துவ சிகிச்சைக்கு பாரிஸிற்கு கொண்டு செல்லப்படுவதையும் அவரது ஆதரவாளர்கள் விம்மியளுவதையும் படத்தில் காணலாம்

# பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத் பாரிஸ் மருத்துவமனையில் அனுமதி

(பாரீஸ்)

**பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத் இரத்தப் புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருக்கலாமென மருத்துவர்கள் சந்தேகம் தெரிவித்ததையடுத்து அவர் சிகிச்சைக்காக பிரான்ஸ் பாரிஸ் இராணுவ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**

உயர் சிகிச்சை பெறும் பொருட்டு பாலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் உள்ள அவரது தலைமை அலுவலகத்தில் இருந்து உலங்குவானூர்தி மூலம் விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட அரபாத் விமானம் மூலம் பாரீஸிற்குப் பயணமானார்.

அவருக்கு விமானத்தில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட விசேட படுக்கை வழங்கப்பட்டது. இதே வேளை ரமலாவில் இருந்து அரபாத் வெளியேறினால் மீண்டும் அங்கு வர அனுமதி வழங்கப்பட மாட்டாது என தெரிவித்த இஸ்ரேலியப் பிரதமர் பின்னர் திரும்பி வர சம்மதம் அளித்ததையடுத்தே ஜசீர் அரபாத் பாரிஸிற்கு பயணமானதாக தகவல்கள் கூறுகின்றன.

# அமெரிக்க சனாதிபதித் தேர்தல் வாக்குப் பதிவு முறையால் புதிய சிக்கல்

## குழப்பம் ஏற்படும் என அச்சம்

(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதித் தேர்தலில், ஆறு விதமான வாக்குப் பதிவு முறைகள் நடைமுறைப்படுத்தப் படவிருப்பதால், குழப்பம் ஏற்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க சனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் (நவம்பர்) 2ஆம் திகதி நடக்கிறது. இதில் இப்போதைய சனாதிபதி புஷ் குடியரசுக் கட்சி சார்பிலும், செனட்டர் ஹெரி சனநாயகக் கட்சி சார்பிலும் போட்டியிடுகிறார்கள்.

அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு விதமான வாக்குப்பதிவு முறையை நடைமுறைப்படுத்தியுள்ளன.

நவம்பர் 2ஆம் திகதி நடைபெறும் தேர்தலில், 'பஞ்ச்' கார்டு மூலம் பதிவு செய்வது லீவரை இழுப்பதன் மூலம் வாக்குப் போடுவது, வாக்குச் சீட்டில் முத்திரை குத்துவது, மின்னணு இயந்திரம் மூலம் வாக்குப் போடுவது, ஆப்டிகல் (கண்ணாடி) ஸ்கேன் மூலம் வாக்குப் பதிவு செய்வது, கலப்பு முறையிலான வாக்குப் பதிவு என ஆறு விதமான வாக்குப் பதிவு முறைகள் உள்ளன.

ஆப்டிகல் ஸ்கேன் முறை 1418 கவுண்டிகளில் (மாவட்டங்களில்) நடைமுறைப்படுத்தப்படும், 669 கவுண்டிகளில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மூலம் வாக்குப் போடுவது அமுல்படுத்தப்படும்.

இப்படி ஆறு முறைகளில் வாக்குப் பதிவு நடைபெறுவதால் குழப்பம் ஏற்படலாம் என்ற அச்சம் 2 பிரதான அரசியல் கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

இதனால் 2 கட்சிகளும் ஆயிரக்கணக்காண வக்கீல்களை திரட்டியுள்ளன. இந்த வக்கீல்கள் புளோரிடா உட்பட 9 மாநிலங்களுக்கு அனுப்பப்பட இருக்கிறார்கள்.

2002ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட புதிய சட்டப்படி வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள், அல்லது அடையாள அட்டை இல்லாதவர்களுக்குத் தற்காலிக வாக்குச் சீட்டு வழங்கப்படும். இந்த வகையான வாக்குச் சீட்டுகள் வாக்காளர்களின் தகுதி உறுதியாகும் வரை தனியாக வைக்கப்படும். இது வாக்கு எண்ணிக்கையை தாமதப்படுத்தும்.

பல நிபுணர்கள் இந்த தற்காலிக வாக்குச் சீட்டுகளுக்கு எதிர்புத் தெரிவித்துள்ளனர். இது நீதிமன்று வழக்கு என்று தேர்தலை சிக்கலாக்கி விடும் என்று அவர்கள் கூறியுள்ளனர். பதிவு செய்யாததால் 30 இலட்சம் வாக்காளர்களுக்கு வாக்கு இல்லை என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

புளோரிடா, ஓஹியோ, மிக்சிகன், மிசவுரி, கொலராடோ ஆகிய 5 மாநிலங்களில் இந்த தற்காலிக வாக்குச் சீட்டு முறையை எதிர்த்து வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

ஆறு விதமான வாக்குப் பதிவு முறையால் குழப்பமும், தற்காலிக வாக்குச் சீட்டால் காலதாமதமும் ஏற்பட்டு அரசியல் சட்ட நெருக்கடியை ஏற்படுத்தலாம் என்று நிபுணர்கள் அஞ்சுகிறார்கள்.


# மேற்குக்கரையில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் சேத விபரம் பற்றி தகவல் இல்லை

(ஜெ[illegible]ன்)

பாலஸ்தீனிய மேற்குக் கரை பகுதியில் உள்ள ஜெனின் நகருக்குள் இஸ்ரேலிய துருப்புகள் புதன்கிழமை நுழைந்து தாக்குதல் நடத்தின. இதையடுத்து அங்கு கடும் சண்டை மூண்டது.

ஜெனின் நகரில் நுழைந்த இஸ்ரேலியப் படைகள் அங்குள்ள அகதிகள் முகாம் மீது தீவிர தாக்குதலை நடத்தின. மேலும் அப்பகுதியிலுள்ள வீடுகளைச் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதேபோல் கடந்த மாதம் இஸ்லாமிய விடுதலை இயக்க தீவிரவாதி அகமது சலாபியை குறிவைத்து ஜெனின் நகர் மீது இஸ்ரேலியத் துருப்புகள் நடத்திய தாக்குதலில் 2 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.



மத்திய அமெரிக்காவில் உள்ள குவேதிமலா நகரிலிருந்து 50 கி.மீ தொலைவில் இருக்கும் சான்ஜீவான் ஸ்கேதி என்ற இடத்தில் பொதுமக்கள் பேருந்து கட்டண உயர்வை எதிர்த்து நூதனப்போராட்டம் நடத்தினர். அதாவது பேருந்துக் கட்டண உயர்வை எதிர்த்து அந்த ஊரில் பேருந்தையே தலைகீழாக உருட்டி தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

# அமெரிக்காவின் கியூபா மீதான பொருளாதாரத் தடையை நீக்கக் கோரும் வாக்கெடுப்புக்கு 117 நாடுகள் ஆதரவு

கியூபா மீது அமெரிக்கா விதித்திருந்த 40 வருட கால பொருளாதாரத் தடை நீக்கப்படவேண்டுமெனக் கோரி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை மீது வாக்களிப்பு நடத்தப்பட்டது.

இதன் போது இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக 179 நாடுகள் வாக்களித்துள்ளன. இதேவேளை அமெரிக்கா, இஸ்ரேல், கலாவோ மாசில்ஸ் தீவுகள் ஆகிய 4 நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன் மைக்கானிட்டியா என்ற நாடு வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. ஐரோப்பிய சமூகநாடுகளான யப்பான், கனடா, அவுஸ்ரேலியா உட்பட பல நாடுகள் பிரேரணையை ஆதரித்து வாக்களித்துள்ளன. இதன் போது இந்நாடுகளின் பிரதிநிதிகள் அங்கு உரை நிகழ்த்துகையில்

கியூபாவுடன் வர்த்தகக் தொடர்புகளை அமெரிக்கா அல்லாத நாடுகளின் நிறுவனங்கள் மேற்கொண்ட சமயத்தில் அமெரிக்க நிறுவனங்கள் தொடர்பான சட்டங்களினால் அவை பாதிக் கப்படுவதாகத் தெரிவித்தன.

1961 ஆம் ஆண்டு பிக்வளைகுடா மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் கியூபா தோற்கடித்ததைத் தொடர்ந்து வர்த்தகம் மற்றும் பிரயாண கட்டுப்பாடுகளை அமெரிக்கா கியூபாவிற்கெதிராக விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

இந்தோனேஷியாவில் 13 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு குட்டி மனித இனம் வசித்ததாக விஞ்ஞானிகள் கண்டு பிடித்து உள்ளனர்.

புளோரெஸ் தீவில் உள்ள ஒரு குகையில் குட்டி மனிதர்களின் படிமங்களை கண்டு எடுத்ததாக அந்த விஞ்ஞானிகள் தெரிவித்தனர். அவர்கள் மேலும் கூறியதாவது:- "இந்த மனிதர்கள் 3 அடி உயரம் மட்டுமே உள்ளனர். அந்த உயரம் உள்ள எலும்புக்கூடுகள் கண்டு எடுக்கப்பட்டன. இதே போல 7எலும்புக் கூடுகள் கண்டு எடுக்கப்பட்டன. இந்த மனிதர்களின் மூளை, மனிதக் குரங்கின் மூளையை விடச சிறியது. முதலில் கண்டு எடுக்கப்பட்ட எலும்புக்கூடு, ஒரு பெண்ணுக்கு உரியது. 25 கிலோ எடையுள்ளது. இறந்த போது அந்தப் பெண்ணுக்கு 30 வயது இருக்கும். இந்த வகை மனிதர்கள், நவீன மனிதர்கள் வாழ்ந்த காலத்திலேயே வாழ்ந்து உள்ளனர். இவ்வாறு அந்த விஞ்ஞானிகள் கூறினர்.

காஷ்மீரில் இஸ்லாமியப் போராளிகளினால் மேற்கொள்ளப்பட்ட இருவேறுபட்ட தாக்குதலில் ஒரு பொலிசார் கொல்லப்பட்டதுடன் நான்கு பொதுமக்கள் காயமடைந்தனர். காஷ்மீர் வீதியில் காவல் கடமையில் ஈடுபட்டுள்ள இந்திய இராணுவம்



# ஈராக்கில் வெடிபொருள் காணாமல் போனது வீடியோ ஒளிநாடா வெளியானது

மிகவும் சர்ச்சைக்குரியதாக மாறியுள்ள ஈராக்கில் பெருந்தொகை வெடிபொருட்கள் காணாமற் போன விடயம் தொடர்பான வீடியோ ஒளி நாடா வெளியிடப்பட்டுள்ளது.

இவ் வெடிபொருட்கள் பாக்தாத்திற்கு அருகேயுள்ள கட்டடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. களஞ்சியசாலையின் பொறுப்பை அமெரிக்கப் படைகள் ஏற்கும் வரை வெடிபொருட்கள் அதற்குள்ளேயே இருந்ததை நிரூபிக்கும் வகையில் வீடியோ நாடாவின் காட்சிகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கின் ரிக்சிட்டில் வெளிநாட்டவரின் சடலம் மீட்பு

(பாக்தாத்)

ஈராக்கில் ரிக்சிட் நகரில் வெளிநாட்டவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இது ஆசிய நாட்டவரின் தோற்றங்களைக் கொண்ட நபரினுடைய சடலமாக இருக்கலாமென ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஜப்பானிய அரசு இது குறித்து விசாரித்து வருவதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கொல்லப்பட்டவர் ஜப்பானியரா என்பதை கண்டறிவதே இதன் நோக்கமாகும்.

# ஈராக் அரச தொலைக்காட்சியின் செய்திவாசிக்கும் பெண் சுட்டுக் கொலை

(பாக்தாத்)

ஈராக்கில் உள்ளது அல்-ஷர்க் கியா தொலைக்காட்சிசேவை அந்த நா[illegible]ன் அரசாங்கமே நடத்தும் சேவை இது, இதில் செய்தி வாசிப்பவர் லி[illegible] அப்துல் ரசாக்.

இவர் வேலை முடிந்து திரும்பியபோது சுட்டுக் கொல்லப்பட்டார். இவருக்கு 6 வயது மகனும், ஒரு மாதப் பெண் குழந்தையும் இருக்கிறார்கள். 2 மாதத்துக்கு முன்புதான் இவரது கணவர் கொல்லப்பட்டார். இந்த 2 கொலைக்கும் காரணம் தெரியவில்லை.

# போரின் சுமைகளுக்குள் கூட்டுறவாளர் ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை

**-திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்**

(திருமலை)

**போரின் சுமைகளுக்கு மத்தியில் யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேச மக்களின் அன்றாட வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கூட்டுறவுச்சங்கங்கள் ஆற்றிய பணிகள் மறக்க முடியாததாகும் என்று விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி. எழிலன் தெரிவித்தார்.**

திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் லிங்கநகர் புதிய மாதிரி விற்பனை நிலையத்தின் திறப்பு நிகழ்வில் நேற்று முன்தினம் காலை பங்கு பற்றிப் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சங்கத்தின் தலைவா பொ.ஜெகதீஸ்வரன் தலைமைவகித்தார். திருகோணமலை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.பாலசுபபிரமணியம் பிரதமவிருந்தினராகப் பங்குபற்றி புதியகிளையைத் திறந்துவைத்தார்.

திருகோணமலை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கடந்தகால சேவைகளைப் பாராட்டிய எழிலன் வளங்களைப் பெருக்குவதிலும் பாதுகாப்பதிலும் அக்கறைகாட்டி வருகின்றது என்று குறிப்பிட்டார். வளங்கள் சரியாகப் பேணப்பட வேண்டும். அப்போதுதான் வகுக்கப்படும் செயற்திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற முடியும். என்றும் எழிலன் தெரிவித்தார்.

லிங்கநகர்க்கிளை தற்போது பதினைந்து இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக்காணியில் சொந்தக் கட்டடத்தில் அமைந்துள்ளது என்று தலைவர் ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதம செய லாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி பேசும் போது 1986-90இற்கு இடைப்பட்ட நெருக்கடியான கால கட்டத்தில் திருமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆற்றிய சேவைகளை நினைவு கூர்ந்தார். கூட்டுறவுத்துறை இலாபத்தை சமூகத்தின் மத்தியில் பங்கீடு செய்யும் அமைப்பாகும். என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதம அதிதியான உதவி ஆணையாளர் பாலசுப்பிரமணியம் பேசும் போது திருமலைக் கூட்டுறவுச சங்கம் திட்டமிட்டு நுகர்வோரின் நலனை முதன்மைப்படுத்தி தனது சேவைகளை ஆற்றி வருவதாகக் குறிப்பிட்டார். சங்கத்தின் பொது முகாமையாளர் த.பாலகெங்காதரன் நன்றி தெரிவித்தார். (25)

## சின்னம் சூட்டல்

துணுக்காய் வலயக்கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட மு/மல்லாவி மத்தியகல்லூரி மாணவர், முதல்வர்களுக்கான 2004 சின்னம் சூட்டும நிகழ்வு அண்மையில் மத்தியகல்லூரி மயில்வாகனம் மண்டபத்தில் ஒழுங்காற்றுக் குழு ஆசிரியர் செல்வி. ச.பாஸ்கரி தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் 23 மாணவ முதலவர்களுக்குச சின்னம் சூட்டப்பட்டது. (24)

# இன்று அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

அகில இலங்கை இந்துமாமன்றத்தினரின் அனுசரணையுடன் கிளி.மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கட்கான கருத்தரங்கு இன்றும் நாளையும் காலை 8.30 மணிக்கு கிளி.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இக்கருத்தரங்கிற்கு கொழும்பிலிருந்து வசந்தா வைத்தியநாதன், கனகசபாபதி நாகேஸ்வரன், அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் வி.கையிலாசபிள்ளை, க.இராஜபுவனீஸ்வரன் மற்றும் பலரும வருகைதந்து விரிவுரையாற்றவுள்ளனர். எனவே கிளி.மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலைகளில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் தவறாது இக்கருத் தரங்கில் பங்குபற்றுமாறு கிளி. மாவட்ட மேலதிக அரசஅதிபர் நா.வேதநாயகன் வேண்டியுள்ளார். (சோ)

# நிரந்தரக் காணி அனுமதிப்பத்திரம் திருநகர் மக்களுக்கு வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி திருநகர் வடக்கு, தெற்கு கிராமமக்களில் ஒரு பகுதியினருக்கு நேற்று முன்தினம் திருநகர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் வைத்து நிரந்தரக்காணி அனுமதிப்பத்திரம் (எல்.டி.ஓ பொமிற்) வழங்கப்பெற்றது.

திருநகர் தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை கிளி.மாவட்ட உதவிஅரச அதிபர் தலைமைப்பீடம் செல்வி.வே. ஜெயராணி, கரைச்சிப்பிரதேச செயலர் செல்வி. க.சுலோஜினி, கரைச்சிப பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன், கரைச்சிப்பிரதேச காணி உத்தியோகத்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை கிளி.மாவட்ட தமிழீழ நிர்வாகசேவை நிர்வாக அலுவலர் ராம்கீ ஏற்றிவைத்தார். தொடர்ந்து தலைமையுரையினையடுத்து சிறப்புரைகள் இடம் பெற்றன.



அதனைத் தொடர்ந்து காணி உரிமையாளர்களுக்கான காணி உரிமைப்பத்திரம் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

உதவி அரச அதிபர் தலைமைப்பீடம், கரைச்சிப்பிரதேச செயலர் ஆகியோர் காணி உரிமைப பத்திரங்களை உரிமையார்களுக்கு வழங்கிவைத்தனர். நன்றியுரை யினை திருமதி.செல்வராணி வழங்கினார். காணி உரிமைப் பத்திரங்கள் 57 காணி உரிமையாள ர்களுக்கு வழங்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஆசிரியர்களுக்கான தங்கும் விடுதியின்றி மாங்குளம் ம.வி ஆசிரியர்கள் அவலம்!

**பாடசாலை வளாகத்தினுள் மழைநீர் தேக்கம்**

(அலுவலகசெய்தியாளர்)

மாங்குளம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் தங்கும்



தேங்கிய நீரில் விளையாடும் மாணவர்கள்

விடுதி இல்லை. தங்கி நின்று கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் கடமைகளினை மேற்கொள்கின்றனர் என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

மேற்படி பாடசாலைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தரும் 9ஆசிரியர்கள் தங்குவதற்கு பாடசாலையில் விடுதி இல்லை. இதனால் ஆசிரியர்கள் அயலவர்களின் வீடுகளில் தங்கிநிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவர்களுக்குப் பாடசாலை வளாகத்தில் விடுதிகளை அமைத்துத் தரும்படி சம்பந்தப்பட்ட ஆசிரியர்களும், பாடசாலை அதிபரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்தோடு ஏ-9 பிரதான வீதிக்கு அருகாமையில் இருக்கும் இப்பாடசாலையில் பிரதான வீதியூடாகச் செல்லும் நீர் முழுவதும் பாடசாலை வளாகத்தில் தங்கி நிற்கின்றன. இதில் தரம் 1, தரம் 2கற்கும் மாணவர்கள் மழைநீரில் விளையாடுவதையும் அதன் வழியாகவே தமது போக்குவரத்தினை மேற்கொண்டு வருவதனையும் காணக்கூடியதாக உள்ளது. (கு,தீ)

# ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்க உறுப்பினர்களுக்கு சுயதொழில் கடனுதவி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கத்தினரால் கரைச்சி, கண்டாவளை, பூநகரி பிரதேசத்தில் வசிக்கும் ஊனமுற்ற (மாற்று வலுவுள்ள) அங்கத்தவர்களுக்கு சுயதொழில் முயற்சியினை மேற்கொள்ளும் பொருட்டு 13பயனாளிகளுக்கு சுழற்சி முறைக் கடனாக 1,30,000 ரூபாய் வழங்கப் பெற்றுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் கமச்செய்கை மேற்கொள்ளும் பொருட்டு மூன்று பயனாளிகளுக்கு 30,000 ரூபாவும், கோழிவளர்ப்பு, சிறுவியாபாரத்திற்கு இரு பயனாளிகளுக்கு 20,000 ரூபாவும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் கமச்செய்கைக்கென நாலு பயனாளிகளுக்கு 40,000 ரூபாவும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் கடற்றொழில் மேற்கொள்ளும் பொருட்டு மூன்று பயனாளிகளுக்கு 35,000 ரூபாவும், கமச்செய்கைக்கென ஒருபயனாளிக்கு 5,000ரூபாவுமாக மொத்தமாக 1,30,000 ரூபா சுழற்சி முறைக் கடனாக வழங்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கரைதுறைப்பற்று பிரதேச சபை உழவு இயந்திர பற்றறி திருட்டு

(முள்ளியவளை)

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் முள்ளியவளை பிரதேச உப அலுவலகத்தில் நின்ற உழவு இயநதிரத்தின் பற்றறி களவாடப் பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் துப்புரவு செய்யபடும் கழிவுகளை ஏற்றிப்பறிக்க பயன் படுத்தப்பட்ட உழவு இயந்திரம் சம்பவதினத்தன்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டுப்பின் அலுவலகத்தில் நிறுத்தப்பட்டிருந்த போது இரவு வேளை களவாடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சுமார் 6500ரூபா பெறுமதி மிக்கபற்றறி களவாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# போக்குவரத்து தடையகற்ற வேண்டும்

(அலுவலகசெய்தியாளர்)

கனகராயன் குளத்திலிருந்து கரப்புக்குத்தி விஞ்ஞானகுளம் ஊடாக நெடுங்கேணி செல்லும் வீதிக்குக் குறுக்கறுத்து அமைந்துள்ள பிரதான ஆற்றில் பெய்து வரும் மழைகாரணமாக பாரிய வெள்ளம் பாய்கின்றது. மழை தொடர்ந்தால் போக்குவரத்துத் தடைபடுமென மக்கள் தெரிவித்தனர்.

மேற்படி ஆறுபாயும் பகுதியில் நீண்டகாலமாக பாலம் அமைக்கப்படாது காணப்படுகின்றது. இதனால் ஒவ்வொரு வருடமும் மழை காலங்களில் இதன்வழியாகப் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமத்தினை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வருடம் மழை அதிகமாக பெய்யுமானால் போக்குவரத்துத் தடைப்படலாமென மக்கள் தெரிவிகின்றனர். அத்துடன் இதன் வழியாக கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் கல்விகற்கவரும் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்படும் என்றும், வரும் க.பொ.த.சாதாரண பரீட்சை மண்டபம் கனகராயன்குளம் மகாவித்தியாலயமாக இருப்பதனால் ஆற்றைத்தாண்டிவரும் இருபாடசாலை மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவது சிரமம் என்றும் பாடசாலை அதிபர் தெரிவித்தார். (கு.தீ)



# வீதிவிபத்துக்களைக் குறைப்பதற்கான ஒக்டோபர் மாநாடு

கடந்த 2 தசாப்தங்களாக யுத்தம் காவு கொண்டிருந்த எமது பிரதேசங்கள் கடந்த 2 ஆண்டுகளாக சமாதானத்தில் மெல்ல தளிர் விட்டு விருட்சமாக வளர எத்தனித்து நிற்கின்றது. யுத்தங்களும், இடம்பெயர்வுகளும், அழிவுகளும் காட்சி தந்த எமது வாழ்விடங்கள் மெல்ல புதியவைகளாக பரிணமிக்கத் தொடங்குகின்றன.உள்ளூரினுள்ளும், வெளியிடங்களிலும், வெளிநாடுகளிலும் இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்த மக்கள் தத்தம் வாழ்விடங்களில் குடியேறி வருகின்றனர். மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படக்கூடாது. அழிவுகளும், உயிரிழப்புக்களும் இனி வேண்டாம் என்ற பிரார்த்தனையோடு குடியேறுகின்ற எமது மக்களிடையே ஒரு யுத்தத்தில். இழந்த இழப்பிற்கு ஈடு இணையாக

1.வீதி விபத்துக்கள், உயிரிழப்புக்கள், காயங்கள், பொருளாதார நட்டங்கள்
2.தற்கொலை முயற்சிகள், மரணங்கள்
3.கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள்
4.பாம்புக்கடி

என்பன அண்மைக்காலமாக மிக வேகமாகக் கூடி வருகின்றன. இவை எதிர்காலத்தில் மருத்துவத்துறைக்கு பெரும சவாலாக அமையக்கூடும் எனவும் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

தற்காப்பு, தடுப்பு முறைகளை சரிவரச் செய்யாது வெறுமனே வைத்தியசாலைகளில் சிகிச்சையளித்து அல்லது மரண விசாரணை மேற்கொண்டு பயனில்லை.

"வருமுன் காப்போம்" என்பது மருத்துவத்தின் மகுட வாக்கியம். அதாவது வெள்ளம் வருமுன் அணை போடுதல் வேண்டும்.

இங்கு நாங்கள் குறிப்பிடுகின்ற நான்கு விடயங்கள் ஆரோக்கியமான கலந்துரையாடல். அதற்கு பின்னான செயற்திட்டங்கள் என்பவற்றின் மூலம் கட்டுப்படுத்த அல்லது இவற்றின் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு உதவும்.

இங்கு நாம் முதலாவது விடயமாக வீதி விபத்துக்களைக் குறைப்பது அல்லது தடுப்பது தொடர்பான விடயத்தை கருத்தில் கொள்வோம்.

**பின்வருவனவற்றை வீதி விபத்துக்கள் அதிகரிப்பிற்கு காரணமாக நோக்கலாம்.**

1.சமாதானத்தின் பின் அதிகரித்த வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பவற்றின் பாவனை.

2.A-9 வீதி குறிப்பிட்ட நேரத்திற்கு மூடப்படுவது.

3.வாகனங்கள் அதிகரிப்பிற்கேற்ப

அ. வீதிகள் சரிவர நீள, அகலங்களுடன் புனரமைக்கப்படாமை.

ஆ.புனரமைக்கப்பட்ட வீதிகளில் காணப்படுகின்ற பள்ளங்களும், திட்டுக்களும் அதாவது சமச்சீராக வீதிகள் அமையாமை.

இ.வீதிகள் கிரவல் கொண்டு புனரமைக்கப்படுகின்றமை.

4.வேகமான வாகனங்கள் கிழப்புகின்ற தூசி,புகை மண்டலம் துவிச்சக்கர, மோட்டார் சைக்கிள், பாதசாரிகள் கண்ணை மறைத்தல் இத்துடன்சுவாசத் தொற்று நோய்கள், ஆஸ்துமா கூடி வருகின்றமை.

5.விபத்துக்களின் போது கிரவல், கற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பலத்த காயங்களை ஏற்படுத்தல்.

6.வீதிகளில் பாதசாரிகள் சென்று வருவதற்குரிய பாதைகள் அமைக்கப்படாமை.

7.பிரதான வீதிகளைத் தவிர உள் வீதிகள் புனரமைக்கப்படாமை.

8.பிரதான வீதிகளிற்கு சமனாக சமாந்தரமாக வேறு வீதிகள அமைக்கப்படாமை.

9.கிளிநொச்சி புதிய நகர்த்திட்டம் அமுல்ப் படுத்தப்படாமல் A-9 வீதியின் இரு பகுதியையும் அண்டியதாக அனைத்துக் காரியாலயங்கள், வாணிப நிறுவனங்கள் வங்கிகள் உருவாக்கப்பட்டுள்ளமை.

10.பொது மக்கள் இன்றும் இரண்டு வருடங்களிற்கு முன்னா கிளிநொச்சி நகர் இருந்தது போன்ற எண்ணத்துடன் வீதிகளில் செல்கின்றமை.

11.பொது மக்களிற்கு சரிவர போக்குவரத்து விதி முறைகளைச் சொல்லிக் கொடுக்காமை.

12.நீண்ட தூரம் பயணிக்கின்ற வாகனங்களை செலுத்துகின்ற சாரதிகளுக்கு போதிய ஓய்வின்மை.

13.சாரதிகளிற்கு இடையில் ஏற்படுகின்ற ஓட்டப்பந்தயம்.

14.வாகன அனுமதிப்பத்திரம் இன்றி சாரதிகளாக கடமையாற்றுதல்.

15.மோட்டார் வாகனங்களை கடன் அடிப்படையில் விற்றல்.

16.தெரு மின்விளக்குகள் இன்மை.

17.சாரதி தவிர்ந்த ஏனைய அனுபவமற்றவர்கள் வாகனங்களைச் செலுத்துதல்.

18.சம்பளத்திற்கு அமர்த்தப்பட்ட வாகன சாரதிகள் பொறுப்பற்று வாகனங்களைச் செலுத்துதல்.

19.பாவனைக்கு உதவாத வாகனங்களின் பாவனை.

20.சாரதிகள் மது போதையில் வாகனங்களைச் செலுத்துதல்.

21.பொது மக்கள் மத்தியில் காணப்படுகின்ற விரக்தி, வெறுப்பு, ஏனோ தானோ என்ற மனப்பாங்குகள்.

22.வீதிகளில் காணப்படுகின்ற கட்டாக்காலி நாய்கள், ஆடு, மாடுகள்

23.வீதிகளில் சமாந்தரமாக செல்கின்ற சைக்கிள் ஓட்டுனர்கள்.

24.மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்வோர் தலைக்கவசம் அணியாமை.

25.பேருந்துகளில் அளவுக்கதிகமாகப் பயணிகளை ஏற்றுதல

26.பாரவூர்திகளில் கூரை மீது இருந்து பயணித்தல்.

27.பொருத்தமற்ற காலங்களில் பாரிய பாலங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பித்திருத்தல். உ:ம் - கைதடிப பாலம்

28.வீதி புனரமைப்பு நடவடிக்கைக்கள் மந்தகதியில் நடைபெறுகின்றமை.

29.வீதி புனரமைப்பிற்காக வீதியோரங்களில் போடப்படுகின்ற கற்கள், மணல்.

30.மோட்டார் சைக்கிள்களின் விலைகுறைவு.

31.வேகக்கட்டுப்பாட்டிற்காக வீதிகளின் குறுக்கே போடப்படுகின்ற அணைகள்.

32.புகையிரத மார்க்கமான போக்குவரத்து ஆரம்பிக்கப்படாமை.

33.இரவு வேளைகளில் மின்விளக்குகள் இன்றி பயணிக்கும் வாகனங்கள்.

34.போக்குவரத்து சமிக்கைகளை பயணிகள் சரிவர விளங்கிக்கொள்ளாமை, பின்பற்றாமை.

35.மழை நாட்களில் வீதியில் தேங்கி அல்லது மேவிப் பாயும் மழைநீர்.

மேற்படி விடயங்களே தற்போது அதிகரித்துச் செல்லும் வீதி விபத்துக்களிற்கு காரணமாக வீதி விபத்துக்களால் பாதிக்கப்படுகின்றவர்களின் வாக்கு மூலங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இம் மாநாட்டில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள், செயற்திட்டங்கள் மூலமாக எதிர்காலத்தில் வீதி விபத்துக்களைக் குறைக்கலாம் என எதிர்பார்க்கலாம். ஏனெனில் இம் மாநாட்டில் பங்கெடுக்கின்ற யாவரும் அவ்வவ் திணைக்களங்களில் முடிவெடுக்கும் உயரதிகாரிகள். எனவே இம்மாநாடு வெற்றியடைய எல்லோரது ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம். நன்றி.

**மருத்துவ சங்கம**
கிளிநொச்சி.

## கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 2004 ஆம் ஆண்டு தை மாதம் தொட்டு இன்று வரை சிகிச்சை பெற்றோர்

## வீதி விபத்துகளிற்கு சிகிச்சையளிக்கப்பட்டோர்

## புள்ளி விபரம்

| தொ இல | மாதம் | OPD சிகிச்சை | விடுதி சிகிச்சை | மேலதிக சிகிச்சைக்கு அனுப்பப்பட்டவர்கள் | மரணம் |
|---|---|---|---|---|---|
| 1 | தை | 84 | 18 | 05 | - |
| 2 | மாசி | 104 | 19 | 07 | 01 |
| 3 | பங்குனி | 128 | 24 | 12 | 01 |
| 4 | சித்திரை | 112 | 14 | 04 | - |
| 5 | வைகாசி | 188 | 20 | 05 | 01 |
| 6 | ஆனி | 176 | 33 | 08 | - |
| 7 | ஆடி | 98 | 14 | 05 | - |
| 8 | ஆவணி | 106 | 19 | 08 | - |
| 9 | புரட்டாதி | 146 | 21 | 14 | - |
| 10 | ஐப்பசி | 104 | 25 | 07 | 03 |

*** யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு இறந்தவர்கள் :04பேர்**

— தமிழர் புனர்வாழ்வுக்கழகம் — யுனிசெவ் இணைந்து —

# முன்பள்ளி ஆசிரியர்களின் தரத்தை மேம்படுத்த குடாநாட்டில் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து யாழ்.குடாநாட்டில் உள்ள முன்பள்ளிகளில் கற்பித்துவரும் முன்பள்ளி ஆசிரியர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் இயங்கி வரும் முன்பள்ளிகளில் பயிற்றுவித்து வரும் ஆசிரியர்களுக்கு துறைசார் வழிகாட்டல்கள் வழங்கப்படாததினால் யாழ்.குடாநாட்டு முன்பள்ளி சிறார்களின் கற்றல் மற்றும் கல்விசார் செயற்பாடுகளில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதனைக் கவனத்தில் கொண்டே தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதனடிப்படையில் யாழ். குடாநாட்டு முன்பள்ளிகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 1178 ஆசிரியர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு முன்பள்ளி கற்பித்தல் நடவடிக்கைகள் குறித்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன. (33)

# தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அபிவிருத்திக்கு படையினர் தொடர்ந்தும் முட்டுக்கட்டை!

–கல்லூரி நிர்வாகம் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் அபிவிருத்திப் பணிகளுக்கு அப்பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரது கெடுபிடிநடவடிக்கை கள் பெரும் முட்டுக்கட்டையாக இருப்பதாக கல்லூரி நிர்வாகத் தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சு தாக்குதல்களால் சேதமடைந்த நிலையில் அடிப்படை வசதிகள் அற்றநிலையில் இயங்கி வரும் இப்பாடசாலை வலிகாமம் வடக்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளது.

இதனால் இப்பாடசாலையை அரசாங்க அதிகாரிகள் மற்றும் உதவும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் சென்று பார்வையிடுவது அப்பகுதியில் நிலை கொண்டுள்ள படையினரது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும என்பதைக் காரணம் காட்டி அப்பாடசாலையை நேரில் பார்வையிட்டு சேதவிபரங்களை அறிந்து கொள்வதற்காக அங்கு செல்ல இராணுவம் அனுமதி மறுத்துள்ளது. இதனால் அப்பாடசாலையின் அபிவிருத்திப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (33)

# காலணியில் புத்தரின் உருவம்!



பிரான்ஸ் காலணி தயாரிப்பு நிறுவனம் ஒன்று தனது உற்பத்தியில் புத்தரின் உருவத்தை பொறித்திருப்பது தொடர்பாக உடனடி விசாரணை நடத்துமாறு சிறிலங்கா பௌத்தமத அமைச்சு வெளிநாட்டமைச்சைக் கோரியுள்ளது.

இந்த விடயம் பௌத்தமக்களைப் பெரிதும் கவலையடையச் செய்துள்ளதாகவும் தமது எதிர்ப்பிற்கும் வெறுப்புக்கும் ஆளாககியிருப்பதாகவும் அமைச்சு சுட்டிகாட்டியுள்ளது. எந்தவொருதயாரிப்புகளிலும் மதச் சின்னங்கள் பொறிக்கப்படக்கூடாது என்ற ஐ.நா.வின் சட்ட விதிகள் கூறும் போது இச் சம்பவம் புத்த பெருமானையும் பௌத்த மதத்தையும் அவமதிப்பதாகவுள்ளது. அத்துடன் ஐ.நா.வின் கலாச்சார மத்திய நிலையம் அமைந்துள்ள பிரான்சில் இது போன்ற அவமதிப்பு நடைபெறுவது கேலிக்குரிய விடயம் என்றும் பௌத்த மத அமைச்சு தெரிவித்துள்ளது.இது தொடர்பாக கொழும்பில் உள்ள பிரான்சிய தூதரகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முக்கிய பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முக்கிய பொதுக்கூட்டம் ஒன்று நாளை 31ஆம் திகதி முற்பகல் 10.00 மணியளவில் சாவகச்சேரி வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ள சாவகச்சேரி வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதுடன் நீண்ட காலமாக செயற்றிறன் அற்றதாகக் காணப்படும் சாவகச்சேரி வைத்தியசாலை புனரமைப்புக் குழுவின் மீளமைப்புத் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# நித்திரையைக் கட்டுப்படுத்த...

விடிந்துவிட்டால் நித்திரை விட்டு எழும்பவும் இரவானதும் நித்திரைக்குச் செல்லவும் மனித இனம் வழக்கமாக்கிக் கொண்டுள்ளது. விலங்குகள் தாவரங்கள் என்பனவும் பொதுவாக இதனைக் கடைப்பிடிக்கின்றன. நீங்கள் கடந்த இரவு நன்றாக நித்திரை கொண்டீர்களா? என்றால் பெரும்பாலானோர் இல்லை என்ற பதிலையே தெரிவிப்பர். நித்திரை என்பது பகல் பொழுதில் அயராது உழைத்த மனிதன் இரவில் தற்காலிகமாக ஓய்வு எடுத்துக்கொள்வதாகும் அப்போது உடலும் உள்ளமும் ஆறுதல் அடைகின்றன. நித்திரையின்மை ஒருவகை நோய் என்றாலும் அது உயிர்வாழ இன்றியமையாத ஒன்றாகும்.


தற்போது வைத்தியசாலை, தொலைபேசி பரிவர்த்தனை நிலையம், ஊடகத்துறை, போக்குவரத்துசேவை, உல்லாசவிடுதி என்பவற்றில் இரவுநேரத்தில் பணியாற்றுவோரின் செயற்திறன் குறைவடைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவர்களில் 20வீதமானோர் உயரதிகாரிகளினால் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவதாக உளவியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். மனிதனின் இயல்பான தேவைகளுக்கு இது ஒருசவாலாக இருப்பினும் உலகிலுள்ள உயிரினங்களின் நடவடிக்கைகள் ஒரு நியதியின் படியே நடைபெறுகின்றன. எனவே இதற்கேற்பவே நமது மூளை செயற்படுகின்றது.

ஆயினும் தற்போது நித்திரை போன்ற அத்தியாவசிய தேவைகளைக் கட்டுப்படுத்த புதிய மருந்து வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வகை மருந்துகள் எமது "இச்சையில்" செயல்களைக் கட்டுப்படுத்துகின்றன. அதாவது நித்திரைகொள்ள வேண்டுமென மூளை அறிவிக்கும்போது அதனைக் கட்டுப்படுத்துவதாகும்.

எமது மூளையில் 20 ஆயிரம் வரையான கலங்கள் காணப்படுகின்றன. அவை இயல்பான ஒலிகளுக்கேற்ப செயற்படுகின்றன. இச்செயற்பாட்டிற்கிணங்கவே மனிதன் இரவில் நித்திரை கொண்டு பகலில் விழித்திருப்பதாகப் பல வருடங்களுக்கு முன் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 24 மணித்தியாலங்களுக்கு ஒருவர் வேலை செய்யும் போது ஒருவகை வாயு புரதத்தை உற்பத்தி செய்வதாகவும் இப்புரத உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நித்திரையின் முக்கியத்துவம் குறைவடைவதாகவும் ஆய்வுகள் மூலம் கூறப்படுகிறது.

இதுபொதுவாக நித்திரைக்கு மட்டுமன்றி உடலில் ஏற்படும் நோய்களுக்கும் பொருந்தும். அதிகமாக காலைநேரங்களில் ஒருவருக்கு மாரடைப்பு நோய் அல்லது மாலை நேரங்களில் தாயின் பிரசவவலி, ஆஸ்த்மா என்பவற்றையும் புதிய மருந்துகள் தடுக்கும்.

இம்மருந்துவகையை அமெரிக்க நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது. இது நித்திரையின்மையைப் போக்கவும் வல்லது. எனினும் கடமைகள் நிமித்தம் நித்திரையைத் தடுக்கும் மருந்துகளைப் பாவிக்கும்போது வாந்தி, மயக்கம் என்பன ஏற்படுவதால் பாதுகாப்பாகக் கையாளவேண்டும். இம்மருந்து வகைகளைப் பாவிக்கும் வாகன ஓட்டுநர், இயந்திரங்களில் பணியாற்றுவோர் சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் வைத்தியர்கள், தாதியர் மிக அவதானத்துடன் இருக்க வேண்டும்.



இச்செயல்முறையைப் பரீட்சித்துப் பார்க்கும் வேளை அறிய வருவதாவது, கண்கள் சூரிய ஒளியை நுகரும் போது நித்திரை மிக அவசியமாகிறது எனக்கண்டறியப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இரவில் கண் விழித்து வேலைசெய்யும் ஒருவர் பகல்பொழுதில் நித்திரை கொள்ளினும் அவருக்கு இயல்பான சுகம் கிடைக்காது என்பதே உண்மை. அத்துடன் அவரின் அறிவுத்திறன் 30வீதம் வீழ்ச்சி ஏற்படும்.

# உடல் பருமன் குறைந்தவர்களுக்கு!

விற்றமின் D பொதுவாக சூரிய ஒளியில் இருந்து கிடைக்கின்றது. விற்றமின் D உடலில் குறைந்தால் எலும்புகள் தொடர்பான நோய் வரும் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே ஆனால் விற்றமின் D அளவு மிகுவதால் உடல் பருமனடைகிறது என டென்னஸ்ஸி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆய்வில் தெரியவந்துள்ளது.

விற்றமின் D யினால் சுரக்கப்படும் புதிய ஓமோன் குறித்து உயிரியல் துறை அதிக கவனத்துடன் ஆய்வுகளை மேற்கொண்டு வந்தது. இந்த ஓமோன் புற்றுநோயைத் தடுக்கின்றது. வயோதிகத் தன்மையை எதிர்க்கின்றது. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகின்றது எனத் தெரிய வந்தன. இந்த ஓமோனுக்கு '1,25 D' எனப் பெயரிடப்பட்டது.

இந்த ஓமோனுக்கு உடலைக் குண்டாக்கும் சக்தி இருப்பது தற்போது தெரியவந்துள்ளது. ஏனெனில் இந்த ஓமோன் உணவுப்பொருளை எரிப்பதா? அல்லது திசுக்களில் கொழுப்பாகப் படியச் செய்வதா? என்று முடிவு செய்யும் காரணி யாக உள்ளது. ஆனால் விற்றமின் Dயினால் மட்டுமே இந்த ஓமோனை உருவாக்கி விட முடியாது. நம் உடலில் உள்ள கல்சியத்தின் அளவு குறைந்தால் இந்த ஓமோன் அதிகமாகச் சுரக்கின்றது. ஏனெனில் கல்சியம் குறைந்தால், கல்சியம் உடலுக்குச் செய்யும் பணிகளில் குறைவு ஏற்படாமல் தடுக்கப் பாராதைராய்டு சுரப்பி பாராதைராய்டு ஓமோனை அதிக அளவில் சுரக்கின்றது.

பாராதைராய்டு ஹார்மோனோடு '1,25 D' ஹார்மோனும் சுரக்கின்றது. எனவே கல்சியம் அதிகமான பொருட்களை உட்கொண்டால் '1,25D' ஓமோன் உற்பத்தி ஆகாது. நமது உடலுக்கு ஆயிரத்து 200 மில்லி கிராம் கல்சியம் தேவை என உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது. ஆனால் கல்சியம் மாத்திரைகளை விட கல்சியம் உள்ள பால், பாலாடைக்கட்டி போன்ற உணவுப்பொருட்களுக்குத்தான் '1,25D' ஓமோன் உற்பத்தியைத் தடைசெய்யும் ஆற்றல் உள்ளது என்பதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

## சிலந்தி வலையின் பலம்

சிலந்தி, பட்டுப்புழு போன்ற பூச்சி இனங்களுக்கு வயிற்றின் பின்புறத்தில் ஒரு இழைபின்னும் உறுப்பு உள்ளது. இதிலிருந்து பசை போன்ற பொருள் சுரக்கிறது. காற்றுப்பட்டவுடன் பசைப்பொருளும் சேர்ந்து கெட்டியான நூல்போல் மாறிவிடுகின்றன. வெளிப்படும் போதே இரண்டு இழைகளையும் முறுக்கேற்றிவிட தனியாக ஸ்பின்னரெட் என்ற உறுப்பு இவற்றுக்கு உள்ளது.

ஒரு குட்டி நூல்ஆலையே பூச்சியின் வயிற்றில் குடியிருக்கிறது என்று கூட வைத்துக் கொள்ளலாம். சிலந்திவலை மிக மெலிதானது சிலந்தியிழையைச் செயற்கையாக பஞ்சு நூல் அளவிற்கு கெட்டியாகத் திரித்தோமானால் அது கெல்வார் எனப்படும் குண்டுதுளைக்காத ஆடையினைக்காட்டிலும் பலமுள்ள நூலாக இருக்கும். இத்தனைக்கும் சிலந்திவலையின் நூல் புரதத்தால் ஆனது தான்.

## நிலநடுக்க மீட்புப்பணியில் எலி

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் எலிகளைப் பயன்படுத்த புளோரிடா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் முயற்சி செய்து வருகின்றனர்.

இந்த எலிகளில் ஒருவித டிரான்ஸ் மீற்றர்கள் பொருத்தப்படுகின்றன. இவை எலிகளின் மூளையின் செயற்பாடுகளை உணர்த்துகின்றன.

இலக்கை அடைந்ததும் இந்த எலிகள் 'ஆஹா' என்பது போன்ற சிக்னலை அனுப்புகின்றன. இந்த சிக்னலின் மூலம் எலியின் இருப்பிடத்தை அறிய முடியும். இதேபோல நிலநடுக்கம் இடிபாடுகளுக்குள் இந்த எலியை அனுப்பி மனிதர்கள் யாராவது




சிக்கியிருக்கிறார்களா என்பதைக் கண்டறிய முடியும். மனிதர்கள் இருப்பதை உணர்ந்தவுடன் இவை சிக்னல்களை அனுப்பும். சிக்னல் கிடைத்தவுடன் இடிபாடுகளில் குறிப்பிட்ட இடத்தை அகற்றி சிக்கியிருந்தவர்களைக் காப்பாற்ற முடியும்.

## நினைவாற்றலை மேம்படுத்தும் தேநீர்

பச்சைத் தேயிலை அல்லது கறுப்புத் தேயிலை போட்டு தேநீர் குடித்தால் நினைவாற்றல் மேம்படும் என்று இங்கிலாந்து விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். 'இங்கிலிஸ் பிரேக் பாஸ்ட் டீ' என்று பொதுவாக சொல்லப்படும் கறுப்புத் தேயிலையும், பச்சைத் தேயிலையைப் போன்றதே. ஆனால் ருசி மற்றும் மணம் வேறு விதமாக இருக்கும். இந்த தேயிலைகள் அல்சீமர் வியாதிக்கு காரணமான acetylcholinesterase என்ற என்சைம்களை அடக்கி அவற்றின் செயற்திறனை குறைக்கிறது. இந்த என்சைம்கள் மூளை செல்கள் இடையிலான நியுரோடிரான்ஸ் மீற்றர் அல்லது வேதிப் பொருள் தகவல் தொடர்பை துண்டிக்கும் வேலையைச் செய்பவை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பிரச்சினையை சமாளிப்பதற்குசந்தையில் தற்போது நிறைய மருந்துகள் கிடைத்தாலும் அவற்றால் விரும்பத்தகாத பக்க விளைவுகளும் உண்டாகின்றன. ஆனால் தேயிலை மூலம் எந்தப் பிரச்சினையும் வராது.


தேயிலையின் இந்த அபார சக்தி காரணமாக நினைவாற்றல் இழப்பால் தோன்றும் அல்சீமர் வியாதிக்குச் சிகிச்சை அளிப்பதில் வரும் காலத்தில் புதுப்புது சிகிச்சை முறைகளைக் கண்டுபிடிக்க வழி பிறந்துள்ளது.



கடந்த 26ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களிடையே பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் தன்மையினை வளர்க்கும் நோக்கத்தோடு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் ஜப்பான்சொனி நிறுவனத் தயாரிப்பான ரோபோ ஒன்று பந்தை அடிக்கிறது

## புத்திசாதுரியம் மிக்க டொல்பின்கள்

டொல்பின்கள் உலகம் முழுவதும் உள்ள சிறுவர்கள் பெரியவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவை. டொல்பின்களைப்பார்த்தால் மனதுக்குள் உற்சாகம் துள்ளும். அதற்குக்காரணம் டொல்பின்கள் சிரித்த முகத்தைக் கொண்டவை தவிர புத்திசாலிகளும்கூட.



ஈராக் போரின்போதும் கூட டொல்பின் மூலம் குண்டுகளை கண்டறியும் முறையை அமெரிக்க இராணுவம் அறிமுகம் செய்தது. டொல்பின்கள் மனிதர்களுக்கு மிகவும் பயனுள்ளவையாகி வருகின்றன.

## வாழைப்பழத்தை நேராக்கலாம்

ஜேர்மனியைச் சேர்ந்த கெர்ல் என்பவர் வாழைப்பழத்தை நேராக்கும் ரோபோ கருவியைக் கண்டுபிடித்துள்ளார்.

வாழைப்பழம் என்றாலே உள் நோக்கி வளைந்திருக்கும் என்பது அனைவரும் அறிந்த விடயம். அந்த குறையைப் போக்கும் வகையில் ஜேர்மனியைச் சேர்ந்த கெர்ல் என்பவர் வாழைப்பழத்தை நேராக்கும ரோபோ கருவியைக் கண்டுபிடித்துள்ளார். மேலும் அவர் வாழைப்பழத்தை ரோபோ மூலம் துண்டுதுண்டாக வெட்டி 'சாண்ட்விச்'யும் தயாரிக்கிறார். இதன்மூலம் வாழைப்பழத்தைப் பல மாதங்களுக்கு அழுகாமல் வைத்திருக்க முடியுமாம்.

# தமிழர் வரலாற்றில் மறக்க முடியாத யாழ்ப்பாண இடப் பெயர்வு

## யாழ்ப்பாண இடப் பெயர்வு நிகழ்ந்து இன்று 9 ஆண்டுகள் நிறைவுறுகின்றன

ஈழத்தமிழரின் வாழ்வின் வரலாறு பல துயர்படிந்த சம்பவங்களைத் தன்னகத்தே பதித்து நீண்டு வந்தது என்றால் அது பொருத்தமான கூற்றாகும்.

இன அடக்கு முறையாளர்களின் கொடூரக்கரங்கள் ஈழத் தமிழர்கள் மீது படிந்து கொடுமைப்படுத்தப்பட்ட சம்பவங்களில் மறக்க முடியாததும் உலகின் மனச்சாட்சிகளை உலுக்கியதுமான சம்பவமான யாழ்ப்பாண இடப்பெயர்வு சம்பவம் நடைபெற்று 9 ஆண்டுகள் நிறைவுறுகின்ற இன்றைய நாளில் அந்தப் பழைய சம்பவம் இன்றும் எம் மனங்களைவிட்டு அகலாத வடுவாகவே உள்ளது. இச்சம்பவம் பற்றி ஒரு கட்டுரையாசிரியர் குறிப்பிடும்போது "யாழ்ப்பாணம் வன்னிக்கு இடம்பெயர்ந்தது" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் 1994ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முந்தைய போர் சூழ்ந்த காலத் தைப் பயன்படுத்தி தன்னை சமாதான தேவதையாகச் சித்திரிக்க 1994ஆம் ஆண்டு பிரதமர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றிபெற்று ஆட்சிப் பீடம் ஏறிய சந்திரிகா அம்மையார் தொடர்ச்சியாக சனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றதனால் மமதை கொண்டவராகச் செயற்பட ஆரம்பித்தார். பதவிக்கு வரும் வரையில் ஈழத்தமிழர் விடயத்தில் நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடித்தது போன்று காட்டிக் கொண்ட சந்திரிகா சனாதிபதி பதவியையும் தன்னகப்படுத்திய பின் இறுக்கமான நிலைப்பாடுகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார். தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்திலேயே நிபந்தனை விதித்தார். இந்நிலை காரணமாக அப்போது இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தைகள் தொடர்வதில் சிக்கல்கள் ஏற்பட்டு யுத்தம் மீண்டும் ஆரம்பமானது.

சந்திரிகாவின் போர் வெறியின் உச்சக்கட்ட வடிவமாக நடந்த ஒரு கொடூர நிகழ்வுதான் யாழ்ப்பாண இடப்பெயர்வு. தமிழ் மக்களின் கலாசார நகரமாகவும், பாரம்பரிய தனித்துவ இருப்பாகவும் இருந்துவந்த யாழ்ப்பாணத்தைச் சிதைப்பதன் மூலம் முனைப்புப் பெற்று இருக்கின்ற தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழித்துவிடலாம் என்று கருதிய சிறிலங்கா அரசு, அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முழு மூச்சுடன் செயற்படத் தொடங்கியது.

19.03.1995 அன்று தொடங்கிய 3ஆம் கட்ட ஈழப்போரிற்குப் பின் பலத்த இழப்புக்களைச் சந்தித்து வந்த சிறிலங்கா அரசானது, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளை வேகப் படுத்தத் தொடங்கியது. யாழ் குடாநாட்டை ஆக்கிரமிக் கும் முதல் எத்தனிப்பாக சந்திரிகா அரசால் மேற்கொள்ளப்பட்ட முன்னேறிப்பாய்தல் இராணுவ நடவடிக்கை படுதோல்வி கண்டது. அடுத்த கட்டமாகத் தமது பலம் அனைத்தையும் ஒன்று சேர்த்து யாழ்குடா இராணுவ நிலைகளைப் பலப்படுத்தி "சூரியகதிர்" என்னும் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை சிறிலங்கா இராணுவம் மிகத்தீவிரமாக மேற்கொண்டது. பலாலிக் கூட்டுப்படைத் தலைமையகத்தால் ஒருங்கிணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை மூலம் யாழ்குடாநாடு முழுவதையும் ஆக்கிரமிக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்தக்கட்டத்தில் தான் ஈழத் தமிழர்களின் துயர்படிந்த வரலாற்றின் மற்றுமோர் அம்சம் ஒன்று ஆழப்பதிந்தது எனலாம். ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்விடமான குறுகிய நிலப்பரப்பைக் கொண்ட யாழ்.குடாநாட்டின் ஒரு பகுதியான வலிகாமம் யுத்தரணகளமாக மாறிவந்ததனால் மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்க வேண்டியதாகியது. எறிகணைவீச்சுகளும் விமானக் குண்டுவீச்சுகளும் மக்களைக் கொன்றும் காயபபடுத்தியும் கொண்டிருக்க தமது வாழ்விடங்களை விட்டு வெளி யேற அவகாசம் அற்ற சூழலில் மக்கள் பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்குத்தள்ளப்பட்டார்கள். இந்த நிலையில் பாதுகாப்பான தென்மராச்சி பகுதிக்கு செம்மணி வீதி, கண்டி வீதியூடாக வெளியேறி நாவற்குளியில் சங்கமித்து ஒரே பாதையினூடாக செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

பருவமழை பெய்து கொண்டிருந்த போதும் குழந்தைகளும், வயோதிபர்களும், நோயாளர்களும் தம் உயிர் காக்க நடந்த வேதனையான சம்பவங்கள் இன்றும் எம் மனக் கண்களில் நின்று நிழலாடுகின்றன. மழைக்கு ஒதுங்குவதற்கு இடமின்றி, பசிக்கு உணவின்றி மக்கள் அங்கலாய்த்தார்கள். பாடசாலைகள், பொது மண்ட பங்கள், கோயில்கள் என பொதுமக்கள் நிறைந்து காணப் பட்டன. இவர்களுக்குரிய அடிப்படைத் தேவைகளை உடனடியாகச் செய்யமுடியாத நிலையில் தொண்டு நிறுவனங்கள் சிரமப்பட்டன. பல்வேறு வசதிகளுடன் தமது சொந்த இடத்தில் சந்தோசமாக வாழ்ந்த மக்கள் ஒரு வேளை உணவாவது கிடைக்காதா என ஏங்கித் தவித்தார்கள்.

நாவற்குழி பாலத்தைக் கடக்க பல மணி நேரம் ஊர்ந்து சென்ற கொடும் பயணத்தை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

பசிக் கொடுமையும், தண் ணீர் தாகத்தினால் அவலப்பட்டமையும் இன்றும் பலர் கண்கள் கலங்க நினைவு கூருகின்றனர்.

பசித்த அழுத பிஞ்சுப் பாலகருக்கு உணவு கொடுக்க முடியாது தவித்த தாய்மாரின் அவலம் நிறைந்த அனுபவம் என்றுமே மறக்க முடியாத துயர்வடுக்கள்.

இப்படியான அவலங்கள் நிறைந்ததும் துயர் தோய்ந்த கட்டங்களைச் சுமந்து பின்னர் நீண்ட கடல் பயணம் மேற்கொண்டு வன்னிக்கு வந்து சேர்ந்த பல இலட்சக்கணக்கான யாழ். குடா நாட்டு மக்கள் துயர் தோய்ந்த வரலாற்றுக்காட்சி எம் விடுதலை நோக்கிய வேகப் பயணத்தின் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றது.

இலங்கைத் தீவின் அரசாங்கம் தான் எனக் கூறிக் கொண்ட சிறிலங்காவின் சந்திரிகா அரசாங்கம் பல லட்சம் யாழ்.குடா நாட்டு மக்களை அவல வாழ்வில் தள்ளியதை தனது பெரு வெற்றியாகக் கருதி வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்தியது . யாழ்ப்பாண குடா நாட்டை சிறிலங்காப் படைகள் ஆக்கிரமித்த செய்தியை தனது மாமனாரான அப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுடன் தங்கத் தட்டில் வைத்துப் பரிமாறி மகிழ்ச்சியடைந்து எக்காளமிட்டார் சந்திரிகா. தமிழ் உலகம் பரிதவித்து நின்றது.




வன்னிக்கு வந்த மக்களையும் நிம்மதியாக இருக்க விடாது சிறிலங்கா அரசினது கொடுங்கரங்கள் பல துன்பங்களை விளைவித்தன. பொருளாதாரத் தடை, மருந்துத் தடை, பாதைத் தடை என்பவற்றுடன் நோய், பட்டினி போன்றவற்றை எதிர்த்து மக்களின் போராட்டங்கள் தொடர்ந்தன.

யாழ்.குடாநாட்டைக் கைப் பற்றினால் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் எனக் கனவு கண்ட சிறிலங்கா அரச தலைமையின் நம்பிக்கையை சிதைப்பதற்காக, வன்னியில் பலம் பெற்றார்கள் தமிழ் மக்கள்.

**முத்தையனூர் ப.துஸ்யந்தன்**

பின்நாளில் பல போராட்டங்களை எதிர் கொண்டு வெற்றி பெற்றார்கள். கடல் கடந்து துயர் பயணத்தில் வந்த மக்கள் ஆனையிறவு என்னும் இராணுவத்தின் பெரும் தடையை அகற்றி தரையால் நடந்து சென்று தம் தாய் மண்ணில் கால் பதித்து மகிழ்வடைந்தனர் எனகின்ற வரலாற்றுத் திருப்பமும் எம் மண்ணில் நடந்தேறியிருக்கிறது. என்பதையும் யாரும் மறப்பதற்கில்லை.

---

# கமக்கார வங்கி திறப்பு விழாவில் பயனாளிகளுக்கு கடன் வழங்கல்

துணுக்காய்ப் பிரதேச கமநல மத்திய சேவை நிலையத்தில் கமக்கார வங்கி திறப்பு விழாவும், 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான உள்ளீடுகள் வழங்கல் நிகழ்வும் துணுக்காய் கமநலசேவை நிலையத்தினரும்,துணுககாய் பாண்டியன்குளம் பிரதேச தமிழீழப்பொருணமிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து கடந்த திங்களன்று நடத்தினர். துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏற்றி வைக்க முல்லை மாவட்ட கமநல திணைக்களத்தின் சம்மேளனக் கொடியை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மங்கல விளக்கினை துணுக்காய்ப் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் செ.புனிதன், கமநல போதனாசிரியர் திருமதி. பு.சிவபாலன், பாண்டியன்குளம் பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர் கி.அமலன், கமநல அபிவிருத்திக குழுத் தலைவர் வீ.தவராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து கமக்கார வங்கிக் கட்டடத்தை முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித்திறந்து வைத்தார். கருத்துரைகளைத் துணுக்காய்ப் பிரதேசப் பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர் கு.ரசிக்குமார் வவுனிக்குளம் நீர்பபாசனத் திணைக்களப் பொறியியலாளர் வ.தவக்குமார், கால்நடைவைத்தியர் ப.கிரிஜகலா, துணுக்காய்ப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.புனிதன், கமநல அபிவிருத்திக்குழுத் தலைவர் வீ.தவராசா ஆகியோர் கருத்துரைகளை வழங்க சிறப்புரையை முல்லை மாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் ஆற்றினார். தொடர்ந்து கமக்கார அமைப்பினருக்கு 10 இரு சக்கர உழவு இயந்திரங்கள் உதவி ஆணையாளர் அவர்களால் கையளிக்கப்பட்டது. இதில் நீர் இறைக்கும் இயந்திரம் 10, கைதெளிகருவி 12, என்பனவும் வழங்கப்பட்டு கடன் அடிப்படையில் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான உள்ளீடுகள் வங்கி ஊடாக கடனாக வழங்கப்பட்டது. நிகழ்வில் கமக்கார அமைப்பினர் கிராம சேவையாளர்கள், இலங்கை வங்கி முகாமையாளர், விவசாயிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள், நலன் விரும்பிகள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

# பண்ணிசைப் போட்டியில் முதன்மை பெற்றோர் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி திருநெறிக்கழ கத்தினர் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையில்கடந்த 24ஆம் திகதியன்று நடாத்தப்பெற்ற பண்ணிசைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்று பரிசில்கள் பெறவுள்ள மாணவர் களினதும் பாடசாலைகளினதும் பெயர் விபரம் வருமாறு;

**கீழ்ப்பிரிவில்**

1.சு.சுகன்யா பளை.மத்தியகல்லூரி, 2.க.கஜகுகன்,பரந்தன் முரசுமோட்டை புனித அந்தோனியார் றோ.க .வித்தியாலயம், 3.யோ. பிரியங்கா, கனகபுரம் மகாவித்தியாலயம்.

**மத்தியபிரிவில்**

1.து.அருந்ததி -பூநகரிமகாவித்தியாலயம், 2.தி.கஜதீபா- சிவநகர் அ.த.க.பாடசாலை, 3.அ.ஜசிந்தா-அக்கராயன் அ.த.க.பாடசாலை,

**மேற்பிரிவில்**

1.க.யதார்த்திகா-உருத்திரபுரம் மகா வித்தியாலயம், 2. த.தயாவதி-பரந்தன் இந்து மகாவித்தியாலயம், 3.ச.சிந்துஜா வட்டக்கச்சி மகாவித்தியாலயம்.

மேலும் ஒவ்வொரு பிரிவிலும் ஐவருக்கு சிறப்புப் பரிசில்கள் வழங்கப்பெறவுள்ளதென திருநெறிக்கழகத் தலைவர் வே.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

(சோ)

# ரவூப் ஹக்கீமின் விருப்பம்!

(கொழும்பு)

சமாதானப் பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குகொள்ள அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்ற வேளை அரசுடன் இணைந்து கொள்ளத் தாம் தயாரென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசியைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


## ஊழியர் தேவை

*எமது நிறுவனத்தின் களஞ்சிய சாலையில் இருந்து பொருட்களை எடுத்து வந்து சரிபார்த்து , சிட்டைப்படி பொதி செய்து வழங்குவதற்கு முன் அனுபவத்துடன் திறமையுள்ள ஆண் பணியாளர்கள் தேவை.*

*மாதாந்தச் சம்பளமாக 7000 ரூபாவும் மேலதிகமான விசேட படிகளும் வழங்கப்படும். சுயவிபரக் கோவை மற்றும் உறுதிப் படுத்தும் சான்றிதழுடன் நேரில் வரவும்.*

சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

☎ 222 2567

(சி.10291)


## - வடக்கு கிழக்கு மாகாண ஆசிரியர்களின் -
# சம்பள நிலுவைப் பணம் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் அசட்டை

வடக்கு கிழக்கு மாகாண ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள நிலுவைப்பணத்தை வழங்குவதற்காக மாகாண நிதி ஆணைக்குழு 100 மில்லியன் ரூபாவை மட்டுமே வழங்கும்படி திறைசேரிக்கு சிபார்சு செய்திருக்கிறது. மத்திய கல்வி அமைச்சு வட்டாரங்கள் இத்தகவலை ஊர்ஜிதம் செய்திருப்பதாக இலங்கைத் தமிழர் ஆரியர் சங்கத் தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவைகளை வழங்குவதற்கு உடனடியாக 325 மில்லியன் ரூபா மாகாணத் திறைசேரிக்குத் தேவைப்படுகிறது. மாகாணத் திறைசேரியோ குறைந்தது 285மில்லியன் ரூபாவாவது சம்பள நிலுவைகளை வழங்குவதற்குத் தேவை என்று மத்திய கல்வி அமைச்சிற்கு அறிவித்துள்ளதாக மாகாணத் திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையில் மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் தாரடிமெல்லை கொழும்பில் இம்மாதம் முதல் வாரத்தில் சந்தித்துப் பேச்சு நடத்திய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழு சம்பள நிலுவை வழங்கப்படாத காரணத்தினால் மாகாண அதிபர், ஆசிரியர்கள் பல கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கவேண்டியிருப்பதாக செயலாளருக்கு சுட்டிக்காட்டப்பட்டதுடன் சம்பள நிலுவை வழங்கப்படும் விடயத்தில் வடக்கு கிழக்கு மாகாணம், ஏனைய மாகாணங்கள் போன்று நடத்தப்படுவதில்லை என்றும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தது. சம்பள நிலுவையை வழங்குவதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு நிதி ஆணைக் குழுவிற்கு சிபார்சு செய்வதாக அப்போது தாராடிமெல் உறுதியளித்திருந்தார்.

இப்போது 100மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு மாகாண நிதி ஆணைக்குழு திறைசேரிக்கு சிபார்சு செய்துள்ளது. ஆசிரியர், அதிபர்கள் வட்டாரங்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. நவமபர் 5ஆம் திகதி கல்வி அமைச்சின் செயலாளர் தாராடிமெல்லை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக் குழு சந்தித்துப் பேசும்போது சம்பள நிலுவைகளை வழங்குவதற்குத் தேவையான முழுத்தொகையையும் மாகாணத்திறைசேரிக்கு வழங்க வேண்டும் என்று வற்புறுத்தும் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (25)


# கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்வி நிறுவகம் கிளிநொச்சி

## கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

*திறன் அபிவிருத்தி, தொழில்சார் மற்றும் தொழில்நுட்பக்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் தொழில் நுட்பக்கல்வி, பயிற்சித் திணைக்களம் அரசாங்க தொழில்நுட்பக்கல்லூரிகளினூடாக நடாத்தப்படும் பின்வரும் கற்கை நெறிகளை கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்வி நிறுவகம் நடாத்தவுள்ளது. கற்கை நெறிமுடிவில் அரசாங்க தொழில்நுட்பக்கல்லூரி சான்றிதழ் வழங்கப்படும்.*

| கற்கைநெறி | தன்மை |
|---|---|
| 01. தேசிய சான்றிதழுக்கான ஆங்கில கற்கைநெறி (NCE) | பகுதிநேரம் |
| 02. தேசிய கணக்கீட்டு தொழில் நுட்பவியலாளர் கற்கைநெறி (NCAT) | பகுதிநேரம் |
| 03. குடிசார் பொறியியல் (NCT) | பகுதிநேரம் |
| 04. கணிய அளவீட்டியல் கற்கை (QS) | பகுதிநேரம் |
| 05. மின்னியலும் இலத்திரனியலும் (NCT) | பகுதிநேரம் |
| 06. மின் இணைப்புப் பயிற்சி (EW) | முழுநேரம் |
| 07. கட்டுமானப் பயிற்சி (MA) | முழுநேரம் |
| 08. மரவேலை தொழில்நுட்பப்பயிற்சி | முழுநேரம் |
| 09. படம் வரைதல் (DA) | பகுதிநேரம் |

மேற்படி பயிற்சிநெறிகள் தொடர்பான மேலதிகவிபரங்களை 01.10.2004. அரச வர்த்தமானியிலோ அல்லது எமது அலுவலகத்திலோ பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்தில் பெற்று உரிய முறையில் பூர்த்தி செய்து 04.11.2004. ஆம் திகதிக்கு முன் கீழ்வரும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு- அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.**

அதிபர்,
தொழில்நுட்பக்கல்வி நிறுவகம்,
கிளிநொச்சி.

(சி.10290)


கனவாய்ப் போனவர்களின் நீங்காத எம் நினைவுகளின்

## 09 ஆம் ஆண்டு நிறைவு நாளில்



ஜெனனம் 25 - 12 - 1969

வீரமரணம் 30 - 10 - 1995

# லெப்.கேணல் அகிலா

சோமசுந்தரம் சத்தியதேவி

*புலனாய்விலேயே பறந்தாயாமே!*
*புதிர் ஒன்றுமில்லைத்தான்–நீ*
*'மனவிசாலச்' சிறகு விரித்தாய்!*

இன்றைய நாளில் அனைத்து மாவீரர்களையும் நினைவு கூரும் அவ்வேளையில் எம்முடன் ஒன்றாகிவிட்டவர்கள் பணி தொடர்வோம்

நன்றியுடன்
போராளிகள்

(சி.10589)


# பயணியர் பேருந்துப்பணி

## கேவில்–புளியங்குளம்

மேற்படி பேருந்துப்பணி 01. 11. 2004 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

### நேர ஒழுங்கு

**கேவில்–புளியங்குளம்**

| கேவில் | உடுத்துறை | தாளையடி | புதுக்காட்டுச் சந்தி | கிளிநொச்சி | முறுகண்டி | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|---|---|---|---|
| காலை07.00 | 07.30 | 07.45 | 08.00 | 08.50 | 09.10-09.30 | 10.45 | 11.00 |

**புளியங்குளம்–கேவில்**

| புளியங்குளம் | மாங்குளம் | முறுகண்டி | கிளிநொச்சி | புதுக்காட்டுச் சந்தி | தாளையடி | உடுத்துறை | கேவில் |
|---|---|---|---|---|---|---|---|
| பகல் 02.30 | 03.15 | 04.00-04.20 | 04.40 | 05.30 | 05.45 | 06.00 | 06.30 |

முகாமையாளர்,
பயணியர்போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப்பணியகம்.

(சி.10287)

# பீகார் மாநில ஆளுநர் ரமாஜாய்ச் தனது பதவியில் இருந்து இராஜினாமாச் செய்தார்

ராஜஸ்தான் ஆளுநர் மதன்லால் குரானாவைத் தொடர்ந்து பீகார் மாநில ஆளுநர் “ரமாஜாய்”சும் தனது பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

பாரதிய ஜனதாக்கட்சித் தலைமையிலான தேசிய சனநாயகக் கூட்டணி ஆட்சியின் போது பல்வேறு மாநிலங்களுக்கும் பல புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

மத்தியில் மன்மோகன்சிங் தலைமையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிஅரசு பதவி ஏற்றதைத் தொடர்ந்து முந்தைய ஆட்சியில் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் மரபுப்படி ராஜினாமாச் செய்ய வேண்டும். அதன் 5 மாநில ஆளுநர்கள் பதவி விலகினார்கள். 6வதாக ராஜஸ்தான் மாநில ஆளுநர் மதன்லால் குரானா ராஜினாமாச் செய்தார். இவர் டில்லி மாநில பா.ஜ முதல்வராக இருந்தவர் ஆவார். சனாதிபதி அப்துல்கலாமைச் சந்தித்து ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்தார். அவரது ராஜினாமா ஏற்கப்பட்டு விட்டது.

தீவிர அரசியலில் ஈடுபடப் போவதாகவும், டில்லி மக்களுக்காகப் பாடுபடப்போவதாகவும் குரானா அறிவித் திருக்கிறார். இந்த நிலையில் பீகார் மாநில ஆளுநர் ரமாஜாய்சும் நேற்று ராஜினாமாச் செய்தார். ராஜினாமாக் கடிதத்தை சனாதிபதி அப்துல்கலாமுக்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பினார். அதில் நவம்பர் 1 ஆம் திகதி தனது ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளும்படி கூறியுள்ளார். இவர் பா.ஜ அனுதாபி என்பது குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர் சுமுகமாக நடைபெற ஒத்துழைப்போம்

## வாஜ்பாயும் அத்வானியும் உறுதி வழங்கினார்கள்

பாராளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர் சுமுகமாக நடைபெற ஒத்துழைப்புக் கொடுப்போம் என்று மக்களவை சபாநாயகரிடம் வாஜ்பாய்-அத்வானி உறுதியளித்தனர்.

மக்களவை முதல் கூட்டத் தொடரும், வரவுசெலவு திட்ட கூட்டத் தொடரும் தே.சனநாயக கூட்டணி கட்சிகளின் ஆர்ப்பாட்டத்தால் திட்டமிட்ட படி நடக்காமல் முன் கூட்டி முடித்து வைக்கப்பட்டது.குற்ற வழக்கு அமைச்சர்கள் பிரச்சினையை கிளப்பி கூட்டத்தை நடத்த விடாமல் தே.சனநாயக கூட்டணிக் கட்சிகள் கலகத்தில் ஈடுபட்டன. இந்த நிலையில் பாராளுமன்ற இரு அவைகளின் குளிர்காலக் கூட்டத் தொடர் டிசம்பர் 1ஆம் திகதி தொடங்குகிறது. அப்போது சபையை சுமுகமாக நடத்துவதற்காக பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோருடன் மக்களவை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார். சபையை எப்படி சுமுகமாக நடத்துவது என்பது பற்றி அவர்களுடன் விவாதித்தார்.

நேற்று பா.ஜ தலைவர்களை அழைத்து சோம்நாத் சட்டர்ஜி ஆலோசனை நடத்தினார்.இதில் வாஜ்பாய், மக்களவை பா.ஜ தலைவர் அத்வானி, மாநிலங்களவை பா.ஜ தலைவர் ஜஸ்வந்த்சிங், வி.கேமல்கோத்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆந்திராவில் 3 தீவிரவாதிகள் பொதுமக்களால் அடித்துக்கொலை

ஆந்திரமாநிலம் மெகபூர் நகர் அருகே உள்ளது தங்கரா கிராமம் இந்தக் கிராமத்தில் உள்ள மாந்தோப்புக்கு நாட்டு வெடிகுண்டு மற்றும் ஆயுதங்களுடன் 7 அல்லது 8 பேர் சென்றனர். கிராமத்தில் உள்ள ஒருவரின் பெயரைச் சொல்லி அவரை அழைத்து வருமாறு தோட்ட உரிமையாளர் கிருஷ்ணய்யாவிடம் கூறினார்கள்.

இந்தத் தகவல் கிடைத்ததும் கிராம மக்கள் திரண்டு வந்து, எதற்காக அவரை அழைக்கிறீர்கள் என்று சண்டை போட்டனர். மோதல் முற்றவே கிராம மக்கள் ஆயுதம்தாங்கி வந்தோரை அடித்து உதைத்தனர். இதில் 3 பேர் பலியானார்கள். மற்றவர்கள் தப்பியோடிவிட்டனர். அவர்கள் ‘நக்சலைட்டுக்கள் என்று கூறப்படுகின்றது.


## நாடக அரங்காடல் பிற்போடல்

31-10-2004 ஞாயிற்றுக் கிழமை மு.கொக்கிளாய் அ.த.க பாடசாலையில் நடைபெற ஒழுங்கு செய்யப் பட்டிருந்த “இடும்பை தீர்ந்தே” என்ற நாடகம் 17.11.2004 ஞாயிறு பி.ப.4.30 மணிக்கு அதே பாடசாலையில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

அரங்க செயற்பாட்டுக் குழு
முல்லைத்தீவு (5055)

## நாகபூசணி அம்மன் திருமணசேவை


எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யாதிருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய்யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்பு கொள்ளவும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- sri nagapusani amman thirumanasavai @yahoo.com.
(சி-10580)


# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

(31-10-2004 அதாவது நாளை ஞாயிற்றுக்கிழமை)



மண்ணில் 20-11-1952 | விண்ணில் 01-10-2004

அமரர்

## அருணாசலம் கோவிந்தசாமி

**(வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் அன்னதான சபைத் தலைவர்)**

### வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வடமராட்சி கரவெட்டியில் அருணாசலம் கண்ணகை தம்பதிகளின் இளைய புதல்வனாக 20.11.1952இல் திரு.கோவிந்தசாமி அவர்கள் அவதரித்தார். தனது சிறுவயதில் சுறுசுறுப்பும் புத்திக்கூர்மையுடைய இவர், தன்னுடைய ஆரம்பக் கல்வியை யாழ்.கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தில் கற்றுத்தேர்ந்தார். இதனைத் தொடர்ந்து பன்னிரெண்டாவது வயதில் தன்னுடைய பெற்றோர்களுடன் முல்லைத்தீவிலுள்ள வற்றாப்பளை என்னும் அழகிய ஊரினை வந்தடைந்தார். இவரின் வாழ்க்கைக்கும், விருப்புக்கும் ஏற்றவாறு இப்பிரதேசம் அமைந்தது. என்பதனைத் தன்னுடைய நண்பர்களிடம் பலமுறை கூறியிருந்தார். இவ்வாறு இளமைப்பராயத்தையடைந்த இவர் பெரியோர்களால் நிச்சயித்தபடி யாழ். மயிலிட்டியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை தங்கம்மா தம்பதிகளின் புதல்வியாகிய தவமலர் என்னும் மாதுவைக்கரம் பிடித்து இனிதாக வாழ்ந்து வந்தார்.

இவரது உறவுகளும் சொந்தங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து அங்கே வாழ்வதற்கு வரும்படி அழைத்த போதும் அவர் வற்றாப்பளை கண்ணகை அம்மனில் கொண்ட தீராத பற்றினால் இவ்வற்றாப்பளையைத் தனது நிரந்தர வசிப்பிடமாக்கினார். இவர் மூன்று புதல்வர்களுக்கும் ஒரு புதல்விக்கும் அன்புத் தந்தையாக இருந்தார். இவர் ஆரம்பகாலம் முதல் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவிலில் தீராத பற்றும் அதிக ஈடுபாடும் கொண்டு வழிபட்டும் தொண்டாற்றியும், வந்தார். (கடல் நீரில் கருணை ஒளியும், பன்னீச்சங்காய்களால் வெள்ளையர்களை அடித்து ஆலய இடிபாட்டைத் தடுத்தும் தன்னுடைய புதுமையை வெளிப்படுத்தி அடியவர்களையும், மக்களையும் காத்தருளிய இவ்வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் அன்னதான சபைத்தலைவராக இருந்து வந்த இவர் அமைதியும், அடக்கமும் கொண்டவர். மேலும் இவரின் அன்பு, இரக்கம் என்பன இவரைச் சமூக மக்கள் பாராட்டுவதற்கு வற்றாப்பளை கண்ணகை அம்பாள் அன்னதான சபையின் தலைவராக அமைதியும், அடக்கமும் கொண்டவராக இருந்து தொண்டர்களுடனும், அடியார்களுடனும் அன்பும், இரக்கமும் காட்டி சேவையாற்றி வந்தார். மக்களினால் விரும்பப்பட்ட இவர் விதியின் வசத்தால் 01.10.2004 இறைவனடி சேர்ந்தார். அன்னார் இவ்வுலகை விட்டுச் சென்றாலும் அவர் செய்த செயற்பாடுகள் நீங்காது நிலைத்திருக்கும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி .. சாந்தி .. சாந்தி

அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதுடன்

**இவருடைய இல்லத்தில் நாளை(31-10-2004 ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவிருக்கும் 31 ஆம் நாள் அந்தியேட்டி நிகழ்வில் கலந்துகொள்ளு மாறு அனைவரையும் அழைக்கின்றோம்.**

*திருமதி கோவிந்தசாமி குடும்பத்தினர்,*
*விஜிதரன் வீதி,*
*வற்றாப்பளை, முள்ளியவளை,*
*முல்லைத்தீவு.*

(சி. 10509)

# சாவு அறிவித்தல்



## ஜோசேப் அடைக்கலதாஸ்

இரணைப்பாலையை வசிப்பிடமாகக் கொண்ட முன்னாள் புதுக்குடியிருப்பு ப.நோ.கூட்டுறவுச்சங்க கிளை முகாமையாளர். ஜோசேப் அடைக்கலதாஸ் 28.10.2004 அன்று காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற மரியமதலேனம்மா திரு. ஜோசேப்பின் மகனும், புனிதராணியின் அன்புக்கணவரும் றெஜினோல்ட், நிக்சன், தர்சன், சயந்தினி, ஸ்ரீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதி நல்லடக்கம் 30.10.2004 காலை 10.00 மணிக்கு புனித பத்திமாதா சேமக்காலையில் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்
மனைவி/பிள்ளைகள்

(5230)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



*பூநகரி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் உயர் திரு முருகேசு குணரட்ணம் ஐயா அவர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.*

அதிகாரி,
சு.வை.அ.பூநகரி,
மற்றும் மலேரியா தடை பகுதியினர்

(சி.10292)

# நாக்பூர் டெஸ்ட் கிரிக்கெட் இந்தியா பரிதாபத்தோல்வி 35 ஆண்டு கால கனவை அவுஸ்.அணி நனவாக்கியது



நாக்பூரில் நடைபெற்று வந்த வரலாற்று சிறப்பு மிக்க முன்றாவதுடெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 342 ஓட்டங்களால் இந்திய அணியை தோற்கடித்து 35 ஆண்டுகள் எட்டப்பட முடியாது இருந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றும் கனவை நனவாக்கியது.

அவுஸ்திரேலியகிரிக்கெட் அணி உலகெங்கும் வெற்றிகளைக் குவித்தாலும் இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை வெல்வது என்பது கனவாகவே இருந்து வந்தது. 1969-70 ஆம் ஆண்டில் மில்லரி தலைமையில் வென்ற தன் பின் கிம்ஹி யூக்ஸ், அலன்போடர், மார்க்டெய்லர், ஸ்டிவ்வோ யாராலும் முடியாத விடயமாக இருந்து வந்த டெஸ்ட் தொடர் வெற்றியை 35 ஆண்டுகளின் பின் கில்கிறிஸ்ட் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியிடம் இந்தியா பறிகொடுத்தது.

இதன் மூலம் வரலாற்று சிறப்பு மிக்க பெருமையை இந்திய அணி இழந்து போனது.

அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் 398, டேமியன் மாட்டின் 114, மைக்கல் கிளார்க் 91, டெரன் லீமன் 70 ஓட்டங்களைப் பெற்ற



னர்.

பந்து வீச்சில் சஹீர் கான் 95 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளைவீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய இந்தியா கிளெஸ்பியின் அதிவேகப் பந்து வீச்சுக்குமுகம்கொடுக்க முடியாது 185 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் முகமட் ஹைவ் மாத்திரம் 55 ஓட்டங்களைப் பெற்றார்.



பந்து வீச்சில் கிளெஸ்பி 5 விக்கெட்டுகளையும், மெக்ராத் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்சை ஆடிய அவுஸ்திரேலியா 5 விக்கெட்டை மாத்திரம்



இழந்து 329 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் மூன்று வீரர்கள் சதத்தைத தவறவிட்டனர்.இதில் முக்கியமானவர் டேமியன் மாட்டின் இவர் சதம் பெற்றிருந்தால் தொடர்ச்சியாக மூன்று சதம் அடித்தவர் என்ற ஹட்ரிக் சாதனை படைத்திருப்பார். இவரை விட ஹட்ரிச் 99, கிளார்க் 73 ஓட்டங்களிலும்



ஆட்டமிழந்தனர்.

பதிலுக்கு 543 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 200 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 342 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஷேவாக்58 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றார்.

இதன் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற முறையில் அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

## இங்கிலாந்து அணி சிம்பாப்வே பயணம்

ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்பதற்காக இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் சிம்பாப்வே செல்வதாக திட்டமிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு மற்றும், அரசியல் சூழ் நிலை காரணமாக, இந்தத் தொடரை இங்கிலாந்து புறக்கணிக்கும் என்ற நிலமை சிம்பாப்வே அணிக்கு விதிக் கப்பட்ட டெஸ்ட் தடையை ஐ.சி.சி சமீபத்தில் நீக்கியது.

இதையடுத்து சிம்பாப்வே பயணம் செய்வது என்று முடிவு செய்தது இங்கிலாந்து கிரிக்கெட நிர்வாகம். ஆனாலும், அங்குள்ள பாதுகாப்பு நிலமையை அறிய, ஒரு குழுவை அனுப்பி வைத்தது. பாதுகாப்புக் குழுவினர் நேற்று முன்தினம் அறிக்கை சமர்ப்பித்தனர். சிம்பாப்வேயில் பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்திகரம் என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இங்கிலாந்து சிம்பாப்வே சுற்றுப் பயணம் செல்ல இங்கிலாந்து முடிவு செய்துள்ளது.




## கராச்சி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் வலுவான நிலையில்



பாகிஸ்தான்- சிறிலங்கா அணிகளுக்கிடையில் கராச்சியில் நடைபெற்று வரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி வலுவான நிலையில் உள்ளது.

முதல் இன்னிங்சில் சிறிலங்கா பெற்ற 208 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடும் பாகிஸ்தான் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதன் மூலம் சிறிலங்காவை விட 90 ஓட்டங்களால் பாகிஸ்தான் முன்னிலையில் உள்ளது.

துடுப்பாட்டத்தில் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய யுனிஸ் கான் 124 ஓட்டங்களையும் இம்ரான் பர்ஹத் 70 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

ஆட்டமிழக்காது அணித் தலைவர் இன்சமாம் உல்ஹக் 79 ஓட்டங்களை பெற்றுள்ளார்.



பந்து வீச்சில் சமிந்தவாஸ் இரண்டு விக்கெட்டுக்களை கைப்பறினார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

## எந்த ஆடுகளத்திலும் சிறப்பாக ஆடும் அணியே உலகின் முதல் தர அணி - ஷேன் வோர்ன்

இந்தியாவில் நாங்கள் விளையாடிய வரையில், நாக்பூர் ஆடுகளமே சிறந்தது. அதற்காக அவுஸ்திரேலிய ஆடுகளம் போல் இருப்பதாக அர்த்தமில்லை. மிகச்சிறந்த ஆட்டத்துக்கு வழிவகுக்கும் ஆடுகளம்இது துடுப்பாட்ட வீரர்கள் பந்து வீச்சாளர்கள் இருவருமே தங்கள் திறமையை இங்கு காட்டமுடியும் என அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்தார்.

முதல் ஒரு மணிநேரம் ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு நல்லஒத்துழைபபு அளிக்கிறது.இதை சமாளித்து விட்டால் போதும் துடுப்பாட்ட வீரர்கள் எளிதாக ஓட்டங்களை குவிக்கலாம்.இதை சரியாக பயன்படுத்திக் கொண்ட எங்கள் வீரர்கள்நல்லஒட்ட எண்ணிக்கையை பெற்றனர் இதே போல் சுழற்பந்து வீச்சாளரும்' இங்கு எதிர்பார்த்த அளவிற்கு பவுன்சருடன் பந்துகளை வீசமுடியும்.போட்டியின் கடைசி இரண்டு நாட்கள் ஆடுகளம் சுழற்பந்துக்கு இன்னும் அதிகம் ஒத்துழைப்பு அளிக்கும் .போட்டி துவங்குவதற்கு முன்னதாக இரு அணி தலைவர்களும், ஆடுகளம் சரியாக அமைக்கப்படவில்லை என்று அதிருப்தி தெரிவித்தனர்.



உண்மையில் இந்த ஆடுகளம் இந்திய அணியின் பந்துவீச்சுக்கு சாதகமாக அமைக்கப படவில்லைதான். மற்றபடி சிறப்பாகத் தான் உள்ளது.சொந்த மண்ணில் விளையாடும் எந்த அணியும் ஆடுகளம் அமைப்பதில் எல்லாம் தலையிடுவது சரியல்ல. உலகின் எந்த ஒரு அணியும் நல்ல ஆடுகளத்தில் விளையாடுவதை தான் விரும்பும். மேலும் எந்த ஆடுகளமாக இருந்தாலும் சரி நன்றாக விளையாடும் அணியே உலகின் 'முதல்தர' அணியாக கருத்தப்படும் என்றார்.

## உலகசெஸ் ஒலிம்பியாட் இந்தியப் பெண்கள் வெற்றி

உலக செஸ் ஒலிம்பியாட் தொடரில் நேற்று முன்தினம் நடந்த 12ஆவது சுற்றில் இந்தியப் பெண்கள் அணி அபாரவெற்றி பெற்றது. ஸ்பெயின் நாட்டின் மல்லார்கா நகரில் 36 ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் தொடர் நடக்கிறது. 14 சுற்றுகள் கொண்ட இத் தொடரில் உலகின் முன்னணி அணிகள் பலவும் விளையாடி வருகின்றன. 12ஆவது சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இந்தியப்பெண்கள் அணி அஜர் பெய்ஜான் அணியை எதிர்த்து விளையாடியது. கோனேரு ஹம்பி,விஜயலட்சுமி அபாராமாக ஆட இந்திய அணி 2.5-0.5 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்றது.

## மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப்போட்டி மன்னார் மாவட்டத்தில் 10 ஆம் திகதி ஆரம்பம்

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத்துறையின் மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறையினர் நடாத்தும் மாபெரும் மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கால்பந்தாட்டம் (ஆண்11பேர்) வலைப்பந்தாட்டம்(பெண்) ஆகிய விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளதெனவும், விண்ணப்பங்களை மன்னார் மாவட்ட அரசியல்துறைச் செயலகத்திற்கு இன்று முதல் எதிர்வரும் 8 ஆம் திகதிக் கிடையில் அனுப்பி வைக்கும் வண்ணம் விளையாட்டுக்கழகங்களை வேண்டியுள்ளதுடன் மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்துக்கழகங்களும் இச்சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளலாமென மன்னார் மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறையினர் தெரிவித்துள்ளனர். (சோ)

## மாவீரர் வெற்றிக் கிண்ணம்-2004 சிறப்புற நடத்த வவுனியா வி.துறை ஏற்பாடு

தமிழீழ தேசிய மாவீரர் நாளினை முன்னிட்டு வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறையினால் மாவீரர்நாள் வெற்றிக் கிண்ணம் 2004 விளையாட்டு விழா வவுனியா மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. வவுனியா மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு கழகங்கள் என இரு பிரிவாக விளையாட்டுப் போட்டிகள் நடை பெறவுள்ளது. போட்டி தொடர்பான சுற்று நிருபங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாகவும் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தாகள் உடாகவும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. போட்டிகளில் கலந்து கொள்கின்ற அணிகள் தங்களது விபரங்களை விளையாட்டுததுறை, கச்சேரி,வவுனியா என்ற முகவரிக்கு 5.11.2004 முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் போட்டி தொடர்பான விபரங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் தங்கள் துறை சார்ந்த அதிகாரிகளிடம் தொடர்பு கொள்ளவும்.

**பாடசாலைக்கான போட்டிகள**

01.வலைப்பந்து 01.01.1988 ஆம திகதிக்கு பின் பிறந்தவர்கள் 02. கால் பந்து 01.01.1988 ஆம் திகதிக்கு பின் பிறந்தவர்கள் 03.மேசைப்பந்து, பூப்பந்து 01.01.1988 ஆம் திகதிக்கு பின் பிறந்த ஆண்/பெண் (5பேர் கொண்ட குழு) 31.12.1987 ஆம் திகதிக்கு முன் பிறந்த ஆண்/ பெண். 04. மரதன் 01.01.1988 ஆம் திகதிக்கு பின் பிறந்த ஆண் 31.12.1987 ஆம் திகதிக்கு முன் பிறந்த பெண் 05. பெண்களுக் கான மரதன் ஓட்டம் பாடசாலை மாணவிகள் சகலரும் கலந்து கொள்ளமுடியும்.

**கழகங்களிற்கான விளையாட்டுப்போட்டி.**


01.கிரிக்கெட் 15 ஓவர் மென் பந்து 02.உதைபந்து 03.வலைபந்து 04. கரப்பந்து (செற்றப்பந்து ஆண்/பெண்)05.கபடி ஆண்/பெண் வவுனியா மாவட்ட வீரர்கள் மட்டும் கலந்து கொள்ள முடியும்.

## இந்தியாவை தோற்கடித்தது சீனா

உலக ஜீனியர் பூப்பந்துப் போட்டியில் இந்தியாவின் கடைசி வாய்ப்பாக இருந்த அபர்ணா பாலன், சாய்னா நேோவால் ஜோடியும் தோல்வி அடைந்தது. கனடாவில் ரிச்மாண்ட் நகரில் உலக ஜீனியர் பூப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி நடக்கிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த காலிறுதிக்கு முந்தைய சுற்றில். இந்திய வீராங்கனைகள் அபர்ணா, சாய்னா, ஐந்தாம் நிலை ஜோடியான சீன தைபேயின்பை சென், பைலிங்சாயை எதிர்த்து விளையாடினர்.

இப்போட்டியில் இந்திய அணி 7-15, 4-15 என்ற நேர் செடகளில் தோல்வியடைந்தது.



**சிந்தனைக்கு**

இலங்கையில் வழக்கிலுள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வருகிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 30-10-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## யுத்தத்திற்கான ஒத்துழைப்பு

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படாமல் சிறிலங்கா அரசாங்கத்திற்கு நிதியுதவி வழங்கப்படக்கூடாதெனத் தம்மைச் சந்தித்த யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வலியுறுத்திக் கூறியுள்ளனர். ஆனால் சிறிலங்கா அரசாங்கத்திற்கு யப்பான் நிதியுதவி வழங் குவதும், வழங்காதுவிடுவதும் யப்பான் அரசினது முடிவே, இருப்பினும் யசூசிஅகாசி போன்றவர்கள் இதில் காத்திரமான பாத்திரத்தை வகிக்க முடியும்.

சிறிலங்கா அரசிற்கான நிதியுதவியை வழங்கக்கூடாது என்பது சிறிலங்கா அரசினது அபிவிருத்திப் பணிகளுக்கு முட்டுக்கட்டைபோடும் நோக்கிலானதல்ல. அவ்வாறு முட்டுக்கட்டை போடுவது என்பதும் நடைமுறையில் சாத்தியமற்றதொன்று. ஆனால் தமிழர் தரப்பு இக்கோரிக்கையை முன்வைத்துள்ளமைக்கு ஒரே காரணம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே.

சிறிலங்கா அரசு இன்று யுத்தநிறுத்ததைக் கடைப்பிடிப்பதும், சமாதானப் பேச்சுவார்த்தை குறித்துப் பேசுவதும் ஒன்றே ஒன்றிற்காக மட்டுமே. அதாவது நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்பதற்காகவே, அதற்கு அப்பால் சிறிலங்கா அரசு சமாதானம் தொடர்பான முன்முயற்சி எதையும் மேற்கொண்டதாக இல்லை.

அதாவது சிறிலங்கா அரசாங்கம் வரவு-செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனத்தில் குறைப்புச் செய்யவில்லை. கடந்த ஆண்டைவிட எட்டுவீத அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. நாட்டில் விலைவாசி ஏற்றம் மற்றும் பெரும்பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தத்தளித்துக்கொண்டிருக்கின்ற போதும் வரவு-செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவினம் என்ற ரீதியில் யுத்தத்திற்கெனப் பெரும் தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க நவீன ஆயுதங்கள் கொள்வனவு செய்வதில் முப்படைத்தரப்பும் தீவிர அக்கறை கொண்டுள்ளது. குறிப்பாக கடற்படை பல கப்பல்களைக் கொள்வனவு செய்துள்ள அதேவேளை இராணுவம் பெரும் அளவிலான டாங்கிகளைக் கொள்வனவு செய்யவுள்ளது.

இந்தவகையில் ஆயுதக்கொள்வனவில் ஈடுபாடு காட்டும்அதேவேளை அரசாங்கம் ஆயுதப்படைத்தரப்பிற்கு நவீன போர்ப் பயிற்சிகளை வழங்குவதிலும் பெரும் ஆர்வம் காட்டிவருகின்றது. இதற்கு இஸ்ரேல், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து பயிற்சிக்கெனவும் ஆலோசனைக்கெனவும் பெருமளவான நிபுணர்கள் அழைக்கப்பட்டு பெறப்பட்டு வருகின்றனர்.

இது மட்டுமல்ல, சர்வதேச மற்றும் பிராந்திய வல்லரசுகளின் பாதுகாப்பு வலைப்பின்னலுக்குள் தம்மையும் உட்படுத்திக்கொள்ள முற்பட்டுள்ளனர். இதற்கென பாதுகாப்பு ஒப்பந்தங்களைக் கூடச்செய்துகொள்ளும் வகையில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அத்தோடு நாட்டின் இறைமையைப் பாதிக்கத்தக்க வகையிலான சலுகைகளைக் கூட அது வழங்கத்தயாராகவுள்ளது.

அதாவது யுத்தநிறுத்தத்தை சிறிலங்கா அரசாங்கம் தன்னைப்பலப்படுத்திக் கொள்வதற்காக முழு அளவில் பயன்படுத்திக் கொண்டுள்ளது. ஆனாலும் அரசாங்கத்தால் யுத்தத்தைத் தொடங்கமுடியாது இருப்பதற்குக் காரணம் அது சந்தித்துள்ள பொருளாதார நெருக்கடியே ஆகும்.

இந்நிலையில் சிறிலங்கா அரசின் நெருக்கடியைத் தீர்க்கத்தக்கதான நிதியுதவி கிடைக்கப்பெறுமானால் சனாதிபதி சந்திரிகா யுத்தத்திற்குச் செல்வதற்கு இருந்த ஒரேயொரு முட்டுக்கட்டையும் நீக்கப்பட்டதாகவே இருக்கும். வேறுவிதமாகக் கூறுவதானால் சிறிலங்காவிற்கு தற்பொழுது வழங்கப்படும் நிதியுதவி யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான நிதியுதவியாகவே இருக்க முடியும்.

சிலவேளை சிறிலங்கா அரசாங்கத்திற்கு வழங்கப்படும் நிதியுதவிக்கு வேறு விளக்கம் எதனையும்– அதாவது அரசாங்கம் நெருக்கடியில் இருந்து மீளும் பட்சத்திலேயே சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியும்– என்பது போன்ற விளக்கங்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு உதவுவதற்கான நொண்டிச்சாட்டாகவே இருக்கமுடியும்.

ஏனெனில் சிறிலங்கா அரசாங்கத்தில் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக வலுவான, உறுதியான சக்திகள் எவையும் இல்லை. அவை சமாதானம் பற்றிப் பேசுவதெல்லாம் நெருக்கடியில் இருந்து மீள்வதற்காகவே. ஆகையால் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படின் சிறிலங்கா அரசிற்கு சமாதானம் என்பது தேவையற்றதாகிவிடும்.

இதேவேளை சமாதானம் தொடர்பாக வழங்கும் வாக்குறுதிகளைச் சிறிலங்கா அரசாங்கம் கடைப்பிடிக்கும் என யாராவது எதிர்பார்ப்பாரேயானால் அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சும். சிறிலங்கா அரசின் –குறிப்பாகச் சனாதிபதி சந்திரிகா போன்றோரின் வாக்குறுதிகள் எத்தனை நம்பகத்தன்மை உடையவையாக இருக்கும் என்பது குறித்து யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி அவர்கள் நேரடியாகவே அனுபவம் பெற்றவர். இதனையும் தெரிந்தும் சிறிலங்காவிற்கு உதவிவிட்டு யுத்தம் ஒன்று மூழும்பட்சத்தில் வேறுயாரையும் குறைகூறுவதில் அர்த்தம் இருக்கமாட்டாது.

# பாதுகாப்புக்கு அதிக நிதிஒதுக்கீடு: மீண்டும் யுத்த மேற்படலாம் என அச்சம்

**கண்டி மாவட்ட பா.உ..திஸ்ஸஅத்தநாயக்கா**

2005 ஆம் ஆண்டு நாட்டிற்கு சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பை மீண்டும் பலப்படுத்துவதற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் அரசாங்கம் நாட்டில் மீண்டும் ஒரு பாரிய யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு தயாராகின்றதென்று கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்துள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசு இது வரை உருப்படியான நடவடிக்கைகளை எடுக்காமல் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளதால் மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பமாகப் போகின்ற தென்ற அச்சம் எமக்கு ஏற்பட்டுள்ளதென்று அவர் அறிவித்துள்ளார்.

# சமாதானத்தை ஏற்படுத்த தான் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறாராம்

***சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்***

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்து வதற்கும் சிறு பான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தாம் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருவதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக யுத்த நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப் போவதாகவும் அவர் தெரிவித்தார். எவ்வாறாயினும் குறுகிய காலத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவது முடியாத காரியமெனவும், சனாதிபதி குருநாகலில் நேற்று முன்தினம் நடை பெற்ற வைபவமொன்றில் தெரிவித்துள்ளார். அரசியல் எதிரிகள் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்த போதிலும் மக்களின் ஆதரவு நிலைக்கும் வரை சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் ஆட்சியில் இருக்குமென்றும் அவர் தெரிவித்தார். நாட்டின் அபிவிருத்தியைப் போன்று இனப் பிரச்சினையும் பெரும் சவாலே என்று தெரிவித்துள்ள அவா, நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தாம் அர்ப்பணிப்போடு செயற்படுவதாகவும் குறிப்பிட்டார். நாட்டை ஒற்றுமைப்படுத்தி ஒருமைப்பாடு மிக்க நிலையான இலங்கை யொன்றை கட்டியெழுப்புவதற்கு தேவையான அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கவும் அரசாங்கம் தயாராகி வருவதாக சனாதிபதி தெரிவித்தா.

# எஸ்.பி.திசாநாயக்க உட்பட 6 பேருக்கு வெளிநாடுசெல்லத் தடை

சமுர்த்தி பாதுகாப்பு நிதியத்தில் உள்ள பணத்தைத் தவறான முறையில் கையாண்டதான குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள முன்னாள் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திசா நாயக்க மற்றும் முன்னாள் மகளிர் விவகார அமைச்சர் உட்பட 6 பேர் நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மொனராகலையிலுள்ள கெனிசரனிய அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் , செயலாளர், பொருளாளர் ஆகியோரும் இரத்தினபுரி சமூக அபிவிருத்தி நிவாரணத்திட்டத்தின் தலைவர் ஆகியோரே ஏனைய 04 பேரும் ஆவார்கள்.

மோசடித் தடுப்புப் பிரிவின் பொலிஸ் அதிகாரிகள் சமர்ப்பித்த அந்தரங்க அறிக்கையினை பரீசிலனை செய்த பின்னர் குடிய கல்வு, குடிவரவு கட்டுப்பாட்டாளருக்கு இந்த உத்தரவை நீதவான் பிறப்பித்துள்ளார். இதனையடுத்து புலன் விசாரணை தொடர்பான முன்னேற்ற அறிக் கையை அடுத்த மாதம் 8 ஆம் திகதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறும் நீதவான் மோசடி தடுப்புப் பிரிவுக்கு உத்தர விட்டுள் ளார்.

சந்தேக நபர்களை கைது செய்யும் தேவை ஏற்படின் சட்டமா அதிபரின் ஆலோசனையைப பெற்றுக் கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# மருத்துவ மாது பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட 02 வது தொகுதியினர்

அண்மையில் நடைபெற்று முடிந்த மருத்துவ மாது நேர்முகப் பரீட்சையில் தேறியவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் வவுனியா பொது தாதியர் பயிற்சி மண்டபத்தில் கடந்த 18.10.2004 தொடக்கம் நடைபெறுகின்றன.

இப் பயிற்சித் திட்டத்தின் இரண்டாம் தொகுதியினருக்கான பெயர்ப் பட்டியல் வெளியாகியுள்ளது. இப் பட்டியலில் உள்ளவர்களை 1.11.2004 ஆம் நாள் திங்கட்கிழமை அன்று பயிற்சி நிலையத்திற்கு செல்லு மாறு கிளிநொச்சிமாகாணசுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் கோட்டுக் கொள்கின்றார்.

கிளிநொச்சி மாவட்டம்

கருணாநிதி கலைவாணி இல.9 ஜெயந்திநகர் கிளிநொச்சி, குகதாசன் சுகிர்தா இல.405 ஜெயந்திநகர் கிளிநொச்சி, ஞானபிரகாசம் ஜெய்கீ. இல. 106 B ஜெயந்திநகர் கிளிநொச்சி, தியாகராசா ரஜனி இல 49 தம்பனை புளியங்குளம் செட்டிகுளம் றோட், மரியமேசூரியர் ஜெயசீலி இல.264 குமுழமுனை பல்லவராயன்கட்டு பூநகரி, கந்தசாமி சுமிதா குஞ்சாபவனம் கண்டாவளை தங்கேஸ் வரன் தாரணி இல14 D.10 உருத்திரபுரம் கிளிநொச்சி, கார்த்திகேசு திலகேஸ்வரி இல:74 இரத்தினபுரம் கிளிநொச்சி, இராசேந்திரம் மதுமிந்தா இல:251 புதியபுன்னை நீராவி விசுவமடு, மரியாம்பிள்ளை தர்மலோஜினி இல198 உதயநகர் கிழக்கு கிளிநொச்சி, மரியாம்பிள்ளை சத்தியராணி இல198 உதயநகர் மேற்கு கிளிநொச்சி, சீவரட்ணம் கீர்த்தா லக்சனா செட்டியகுறிச்சி பூநகரி நல்லையா சிவஞான கலாராணி இல.10/2 தொட்டியடி விசுவமடு தேவேந்திரன் கேதீஸ்வரி இல.179 உதயநகர் கிழக்கு நல்லையா சிவரூபி இல10/2 தொட்டியடி விஸ்வமடு, ரத்தினராசா பாரதி இல.115, பாலிநகர், வவுனிக்குளம் பொடி சிங்கம் தனலக்சுமி இல. 143 பாண்டியன்குளம், நட்டான்கண்டல் ரத்தினசிங்கம் யுவராணி கள்ளப்பாடு முல்லைத்தீவு, செல்லத்துரை பாமினி மாமுனை முள்ளியவளை, பாலகிருஷ்ணன் சத்தியபிரபா கணுக்கேணி கிழக்கு முள்ளியவளை முல்லைத்தீவு, கிருஷாந்தி 3ஆம் வட்டாரம் முள்ளியவளை, வரதராசா வேதாகி இல 5தேவிபுரம் சந்தி புதுக்குடியிருப்பு முல்லைத் தீவு, சிவஞான சுந்தரம் சுகந்தினி இல 8 புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, தேவதாஸ் ஜெனிற்றா செல்வபுரம் முல்லைத்தீவு

# அரசாங்கத்திற்கெதிராக காலியில் நேற்று ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்துக்கு எதிராக ஐ.தே.க.நேற்று காலி நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது நாட்டில் விலையுயர்வுகள் மற்றும் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.இதில் ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெருமளவானோர் கொட்டும் மழையையும் பாராது பங் கேற்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (32)

### தபாற் கட்டணம் அதிகரிக்கப்படலாம்

தபால் திணைக்களத்திலேற்பட்டுள்ள நட்டத்தின் காரணமாக தபாற்கட்டணங்கள் அதிகரிக்கப் படவுள்ளதாகத் தபாற் திணைக் களதகவல்கள் தெரிவிக்கின்றன. தபாற்திணைக்களத் தகவல்களின படி உள்ளூர் சாதாரண தபாற்கட்டணம் ரூபா 5 ஆகவும் பதிவுத்த தபாள் கட்டணம் 20.00 ஆகவும் உயரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. வெளிநாட்டுத் தபால் களிற்கான கட்டணமும் உயர்த்தப்படும் எனவும் தெரியவருகிறது.

# அமெ.கூட்டுப்படைகளினால் ஒரு லட்சம் ஈராக்கியர் பலி!

### -அமெரிக்க ஆய்வாளர்கள் தகவல்

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஈராக்கிற்குள் நுழைந்தபின் அங்கு ஏற்பட்ட வன்முறைகளில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஈராக்கிய பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிலாமென "லான்சட்" என்ற மருத்தவ அறிக்கை அதிர்ச்சித்தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த விபரத்தை அமெரிக்காவின் ஆய்வாளர்களே வெளியிட்டுள்ளனர். இதேவேளை ஈராக் போர் தொடங்கிய காலம் முதல் இதுவரை ஈராக்கில் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை பத்தாயிரம் முதல் பதினையாயிரம் வரைதான் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜோன் ஹொக்ஸின் பல்கலைக்கழகத்தின் பொதுச் சுகாதாரக் கல்லூரியைச் சேர்ந்த இந்த ஆராச்சியாளர்கள் பொதுமக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டமையே அதிகளவானோர் இறக்கக் காரணம் எனக்கூறியுள்ளார்.

மார்ச் இரண்டாயிரத்து மூன்றில் அமெரிக்க கூட்டுப்படையினர் ஈராக்கிற்குள் நுழைந்தபின்னர் கொல்லப்பட்ட இந்த ஒரு லட்சம் ஈராக்கிய பொதுமக்களில் அரைவாசிப்பேர் பெண்களும் குழந்தைகளும் எனவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. அதேவேளை அமெரிக்கா, பிரிட்டன், மற்றும் பன்னாட்டு கூட்டணிப் படைகள் தரப்பில் ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

இதேவேளை பலூஜாவின் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை தனியாக எடுத்ததில் சாவு எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கும் எனவும் ஆய்வாளர்கள் மேலும் கூறியுள்ளனர். இந்த ஆய்வின் முடிவு பெரும் கவலை தருவதாகவும் யதார்த்தத்தை உறைக்க வைப்பதாகவும் இருக்கின்றது. முந்தைய மதிப்பீடுகளை விட கணிசமான அளவாக இருக்கின்றது.

இதற்குக்காரணம் கூட்டணியினர் தாங்கள் எவ்வளவு பேரைக் கொல்கிறோம் என்பதில் கவலைப்படுவதே இல்லை என்பதையும் ஆய்வுகளை நடத்தியவர்கள் கூறுகின்றனர். இதேவேளை கடந்த வருடம் ஐ.நா. ஆயுதக்கண்காணிப்பாளர்கள் ஈராக்கில் தனது ஆய்வைச் செய்து முடிப்பதற்கு இன்னும் கொஞ்சம் அவகாசம் தரும்படி அமெரிக்காவையும் பிரிட்டனையும் கேட்டபோது அவர்கள் மறுத்தது எவ்வளவு தவறாகப் போயுள்ளது. அது நடைபெற்றிருந்தால் இந்த ஒருலட்சம் பேரும் இறந்திருக்கமாட்டார்கள் என்றார்கள் அவர்கள்.

## ஈராக் தீவிரவாதிகளால் இலங்கையர் ஒருவர் கடத்தல்

ஈராக்கில் கடத்தி செல்லப்பட்ட இலங்கையர் தினேஸ் தர்மேந்திரன் என வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது .இவர் ஈராக்கில் உள்ள அமெரிக்க தளம் ஒன்றுக்கு தாம் பணியாற்றும் கனரக வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருக்கையிலேயே இவர் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் கடத்தபட்டவர் இலங்கை பிரஜையா? அல்லது வேறு நாட்டவரா? என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என லெபனானில் உள்ள இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்

இதேவேளை தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட இலங்கையைச் சேர்ந்த ட்றக் சாரதி தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாக லெபனானிற்கான இலங்கைத் தூதுவர் அமானுஷ் பாரூக் தெரிவித்துள்ளார். கடத்திச் செல்லப்பட்டவர் தொடர்பான உறுதியான தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லையென்று அவர் கூறினார். போர்ச் சூழ்நிலை காரணமாக ஈராக்கிற்கான இலங்கைத் தூதரகத்தின் நடவடிக்கைகள் இடம் பெறுவதில்லை. இதனால் லெபனானிலுள்ள இலங்கைத் தூதரகமே ஈராக் தொடர்பாகவும் இயங்கி வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

(32)

### உந்துருளி...

கத்திற்கு முன்பாகவுள்ள ஆடிய பாதம் வீதியால் உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்த இம் மூவரும் உந்துருளியைத் திடீரென நிறுத்த வேண்டியதேவை ஏற்பட்டதன் காரணமாக ஏற்பட்ட தளம்பல் நிலையை அடுத்து அவ் உந்துருளி வீதியை விட்டு விலகி பாய்ந்ததில் அதன் பின்ன இருக்கையில் இருந்து பயணம் செய்தவர் பலியானதுடன் அதனை ஓட்டியவரும் மற்றவரும் காயமடைந்தனர்.

(33)

### அரசா...

வார்த்தையில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாகவே சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றைக் காண இணக்கம் எற்பட்டது.

இடைக் காலத் தீர்வாக விடுதலைப் புலிகள் தன்னாட்சியுள்ள இடைக்கால சபை யோசனையை முன் வைத்தார்கள். அந்த யோசனையை ஏற்காது விட்டாலும் அதன் அடிப்படையில் பேச்சுவார்தைகளை ஆரம்பிப்பதில் எந்தத் தடையும் இல்லை. தற்போதய அரசாங்கம் பல கட்சிகளைக் கொண்டமையினால் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. அரசியல் யாப்பை மாற்றுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் சர்வசன வாக்கெடுப்பும் தேவை ஆனால் அதற்கு மாறாக அரசியல் யாப்புச் சபையை உருவாக்க சனாதிபதி முற்படுகின்றார். இது நாட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். அப்படியானால் விடுதலைப் புலிகளும் அரசியல்யாப்பை உருவாக்கி தாங்களும் ஒரு ராச்சியத்தை உருவாக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். வடக்கு கிழக்கு மக்கள் இடைக்கால தன்னாட்சியை அமைப்பதற்காகவே 22 பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்து பாராளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளனர். எனவே அரசாங்கத்தின் குறுக்கு வழியிலான அரசியலமைப்புத் திருத்தத்தை முன்மாதிரியாகக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளும் இந்த 22 பேரையும் கொண்டு வடக்கு கிழக்கில் தனியான அரசியல் அமைப்பு நிர்ணய சபையை அமைப்பதனை எவராலும் தடுக்க முடியாமல் போய் விடும். அதே நேரம் சமாதானத்தின் எதிர்காலம் கேள்விக்குறியதாகி விடும் என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். எனவே சனாதிபதி உடனடியாக இடைக்காலத் தன்னாட்சி தொடர்பில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் அவ்வாறு நடைபெறுகின்ற எந்த ஒரு கட்டத்துக்கும் தாம் சுனாதிபதிக்கு ஆதரவளிகக தயார் என தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க அதனை விடுத்து நாட்டை பாதாளத்துக்கு தள்ளும் நடவடிக்கைகளை அரசாங்கம் கைவிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

(32)

### போராளி...

அடையாள அணிவகுப்பிற்கு ஆஜர்படுத்துமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இருந்த போதிலும், மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து இவரை அழைத்து வருவதில் பாதுகாப்பு பிரச்சினை இருப்பதாக சிறைச்சாலை அதியட்சகர் அக்கரைப் பற்று நீதிமன்றத்தில் நேற்று அறிக்கை சமர்ப்பித்தார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் கால வரையறையின்றி அடையாள அணிவகுப்பை ஒத்திவைத்துள்ளது.

### புலிகள்...

தளபதி கேணல் குலதுங்க மற்றும் 512 ஆவது கட்டளை தளபதி கேணல் ரட்ணநாயக்க ஆகியோரும் யாழ். மாவட்ட பொலிஸ் மா அதிபர் வசந்த வணகுரு ஆகியயோரும் கலந்திருந்தனர்.

இதன் போது யாழ் குடாநாட்டு மக்களுக்கு இயல்பு வாழ்வை ஏற்படுத்தும் விதத்தில் படையினரது கெடுபிடி நடவடிக்கைகள் நீக்கப்படல் வேண்டும் எனவும்,

மக்களின் இயல்பு வாழ்விற்கு வழிவகுக்கும் விதமாக மக்களின் குடியிருப்புகளுக்கு அண்மையாக உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படுவதுடன் மாணவர்களது இயல்பான கல்வி நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் முகமாக பாடசாலைகளை அண்மித்துள்ள படை முகாம்கள் அகற்றப்படல் வேண்டும் எனவும் புலிகள் தரப்பில் இருந்து கோரப்ட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(33)

### சனாதிபதி...

கூற்று கவலைக்குரியதென பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். விசேடமாக விமல்வீரவன்ச போன்ற பொறுப்பு வாய்ந்த கட்சித் தலைவர் ஒருவர் இவ்வாறான கூற்றை வெளிப்படுத்தியமை ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்கை அடிப்படையில் வேறுபாடுகள் இருப்பினும் மக்கள் விடுதலை முன்னணியுடன் ஒத்துழைத்து செயற்படவேண்டுமென்பதே நமது நம்பிக்கையென பிரதியமைச்சர் டிலான் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் மக்களது எதிர்பார்ப்புக்களை தீர்ப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினைப் பலப்படுத்துவதற்கு அர்ப்பணிப்பை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியிடமும் ஆதரவாளர்களிடமும் அக்கூட்டமைப்புக் கேட்டுக்கொண்டுள்ளது.

## விஞ்ஞானக் கண்காட்சி ஒத்தி வைப்பு

தவிக்கமுடியாத காரணங்களினால் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் நடை பெற்றுவரும் கண்காட்சி இன்று நடைபெறமாட்டாது.

கண்காட்சி எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகி அன்றும் அடுத்த நாளான செவ்வாய்க்கிழமையும் வழமையான நேரங்களில் நடைபெறும் என விஞ்ஞான பீடாதிபதி அறிவித்துள்ளார்

### -யாழ்.மாநகரசபையினரின்-

## குப்பைகளை அகற்றும் நடவடிக்கையில் தடங்கல்

யாழ்.மாநகர சபையினால் குப்பைகளை அகற்றுவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளமை காரணமாக வீதிகளில் குப்பைகளை கொட்ட வேண்டாமென யாழ்.மாநகர ஆணையாளர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"காக்கை தீவில், யாழ். மாநகர சபையினருடைய கழிவுக் குப்பைகளைக் கொட்டுவதில் சில தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் அடுத்த அறிவித்தல் வரும் வரை மாநகரசபையின் எக்குடியிருப்பாளர்களும் தங்கள் வீட்டுக் கழிவுக் குப்பைகளை வீதியில் கொட்டக் கூடாது என்றும் தங்களது வீட்டு வளவிற்குள்ளேயே அவற்றைப் புதைதோ, அல்லது வேறு விதமாகவோ அழிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மாறாக வீதியில் கொட்டப்பட்டிருப்பது தெரியவரின் அதற்கான தண்டத்தை அவர்கள் செலுத்த வேண்டியிருக்கும். என்பதையும் அறியத்தருகின்றேன். இது சம்பந்தமான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரை இந்த அறிவுறுத்தல் நடைமுறையில் இருக்கும் என்பதையும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஜேர்மன்...

வை.எம்.சி.ஏ மண்டபத்தில் பவ்ரல் அமைப்பினரால் ஏற்பாடு செய்திருந்த யாழ் குடாநாட்டு மக்களின் சமகால அரசியல் நிலைப்பாடுகள் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்பின் பிரதிநிதிகள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு புதிய அரசின் ஆட்சிக்காலத்திலும் யாழ். மக்கள் எதிர்கொள்ளும் இராணுவ, அரசியல் நெருக்கடிகள் சம்பந்தமாக அவருக்கு விளக்கினர். (33)

### சமாதான...

கொழும்பு தலைமை யகத்தில் நடைபெற்றது. ஜே.வி.பியின் கருத்துக்களை செவிமடுத்த யசூசி அகாசி தாம் இந்த கருத்துக்களை தமது அரசாங்கத்திடம் முன்வைப்பதாக தெரிவித்தார். (32)

### ஆளுநரின்...

கொண்டிருக்கும் சூழ்நிலையில் எந்தவித தீர்வுமற்ற நிலையில் தாங்கள் யாழ்.வருவதை முற்றாக எதிர்க்கிறோம். நீங்கள் வருவதை எந்தவொரு தமிழனும் விரும்பவில்லை.

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு சுமார் ஆயிரம் நாட்களாகிவிட்டன. ஆயினும் இவ்வுடன்பாட்டில் சொல்லப்பட்ட அம்சங்களை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டது. இதனால் வடக்கு கிழக்குப் பகுதியில் மக்களின் இயல்பு வாழ்வு நிலை வழமைக்குத் திரும்பவில்லை. புலம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர முடியவில்லை. மக்களின் வாழ்விடங்களில் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

போரினால் உயிரிழந்து, உடைமையிழந்து வாழ்வில் ஆதாரங்கள் அனைத்தையும் இழந்து பட்டினியுடன் வாழ்வை சுமந்து செல்லும் இந்த மக்களின் நிலை குறித்து அரசு கவனம் செலுத்தவில்லை. வடக்கு கிழக்கு ஆளுநராக இருக்கும் தாங்களும் அரசுக்கு இடித்துச் சொல்லவில்லை. இந்த நாட்டில் அனைத்து உரிமைகளையும் பெறத்தகுதியுள்ளவர்களாகத் தமிழர்கள் இருந்து வருகிறார்கள். தமிழ் மக்களின் உணர்வுகளை நீங்கள் புரிந்து கொள்ள மறுக்கிறீர்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிக்கவும், மீள் குடியமர்வு புனர்வாழ்வு புனரமைப்பு, புனர்நிர்மானப் பணிகளை மேற்கொள்ளவும், இயல்பு வாழ்வு நிலையை தோற்றுவிக்கவும் தமிழ் மக்களால் முன்மொழியப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினால் இலங்கை அரசிறக்கு முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அலகும் இன்று கேள்விக்குறியாக மாறியுள்ளது. இது தொடர்பாக இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. தமிழ் மக்கள் எதிர்பார்த்த இயல்பு வாழ்வுமில்லை, இடைக்கால அரசும் இல்லை. இலங்கை அரசு மீது தமிழ் மக்கள் நம்பிக்கையை முற்றாக இழந்துள்ளனர். இச் சூழ்நிலையில் அரசின் முக்கிய பிரதிநிதியான ஆளுநர் வரவை தமிழ் மக்கள் விரும்பவில்லை என்பதை தங்கள் கவனத்திற்கு தருகின்றோம்.

வடக்கு கிழக்குப் பகுதியில் பதட்டத்தை தணித்து தமிழ் பேசும் மக்களின் இயல்பு வாழ்வு நிலையை உறுதிப்படுத்தி தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப்புலிகளிடம் வழங்கவும், அதுவே நீண்ட காலமாக புரையோடிப்போயிருக்கும் இலங்கையின் இனப்பிணக்கை தீர்த்து வைக்க உதவும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்குத் தீர்வு காணாமல் எந்தவொரு அரசுப்பிரதிநிதியும் இங்கு வருவதால் எதுவும் ஏற்படப்போவதில்லை.

பிரச்சினைகளுக்கு ஒரு நியாயபூர்வமான தீர்வை கொடுத்தால் நிச்சயம் தமிழ் மக்கள் உங்களை வரவேற்பார்கள். அதுவரை பொறுத்திருங்கள். தமிழ் மக்களின் அங்கீகாரத்தோடு ஒரு சுமுகமான சூழ்நிலையில் தாங்கள் யாழ்ப்பாணம் வருவதே பொருத்தமானதாகவிருக்கும்.

தங்களின் யாழ்ப்பாண விஜயத்திற்கு பல்வேறு அமைப்புக்கள் எம்மிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளன. தமிழ் மக்கள் மத்தியில் இவ்விஜயம் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் யாழ்.வருவதைத் தாங்கள் நிறுத்திக்கொள்ளவும் எமது எதிர்ப்பை மீறி தாங்கள் யாழ்.விஜயம் செய்தால் கடும் எதிர்ப்பைச் சந்திக்க நேரிடும் என்பதோடு வெகுசனப் போராட்டம் நடாத்தப்படும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.